ஐக்கியதென் பத்து
யாழ்ப்பாணம்
கல்லூர் ஒன நூலகம்
29 MAR 1999
30 MAR 1999
Registered as a News Paper
பொது சன நூலகம்
28 MAR 1999


# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 14 வள்ளுவர் ஆண்டு 2030 பங்குனி 15 திங்கட்கிழமை (29-03-1999) UTHAYANA Lively National Tamil Daily கதிர் 104


### மரண தண்டனைக்கு எதிர்ப்பு

## வெலிக்கடைச் சிறையில் கைதிகள் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, மார்ச் 29

மரண தண்டனையை மீண்டும் நிறைவேற்றும் நடைமுறையை அரசு அமுல் செய்வதைக் கண்டித்து வெலிக்கடைச் சிறைச்சாலையில் உள்ள கைதிகள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்தஆர்ப்பாட்டத்தை அடுத்து அந்த முகாமில் இருந்த 18 கைதிகள் உடனடியாக வேறு முகாம்களுக்கு மாற்றப்பட்டனர்.

காலி, நீர்கொழும்பு, கண்டி, தங்காலை ஆகிய முகாம்களுக்கே அவர்கள் மாற்றப்பட்டனர். (இ-3)

## அரசுடனும் - புலிகளுடனும் அரச அதிபர் நேற்று தொடர்பு

### வாகன அணிப்பாதை குறித்து முடிவு இல்லை

வவுனியா, மார்ச் 29

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னிப் பகுதிக்கு தடைப்பட்டுள்ள உணவு விநியோகத்தைச் சீராக்குவது தொடர்பாக வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் அரசு மற்றும் விடுதலைப் புலிகளுடன் தொடர்பு கொண்டுள்ளார்.

சுமார் மூன்று வார காலமாக இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்கு உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்கள் அனுப்பப்படாததால் அங்கு உணவுப்பொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

உணவு மற்றும் பொருள்கள் கொண்ட வாகன அணி

(9 ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையில் காணாமற் போனோரில் 12 ஆயிரத்து 108 பேர் குறித்து இதுவரை தகவல் இல்லை!

## அலுவலகங்களில் சிகரெட் புகைக்கத் தடை

கொழும்பு, மார்ச் 29

அரச அலுவலகங்கள், கூட்டுத்தாபனங்களில் அலுவலக நேரங்களில் சிகரெட் புகைப்பதற்கு நேற்று முதல் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் வி. ஏ. சேனரத்தின் இது சம்பந்தமான சுற்றறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டார்.

இத்தத்தடையை மீறுவோர் மீது கடும் நடவடிக்கை எடுக்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## பெரும்பாலானோர் வடக்கு - கிழக்கு தமிழர்

ஜெனிவா, மார்ச் 29

இலங்கையில் காணாமற் போனோரில் 12 ஆயிரத்து 108 பேர் பற்றிய தகவல் இன்னும் தெரிய வரவில்லை. உலகில் காணாமற் போனோர் அதிகமாக உள்ள நாடுகளில் இலங்கை இரண்டாவது இடத்தை வகிக்கிறது.

மேற் கண்டவாறு ஐ.நா. மனித உரிமைகள் செயலணிக் குழு தெரிவித்துள்ளது.

ஐ. நா. மனிதஉரிமைகள் செயலணிக் குழுவின் 55ஆவது கூட்டத் தொடர் தற்சமயம் ஜெனிவாவில் நடைபெற்று வருகின்றது.

அந்தக் கூட்டத் தொடரிலேயே இந்த விவரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கூட்டத் தொடரில் தெரி

(9 ஆம் பக்கம் பார்க்க)



புகைப் பிரியர்கள் அப்ப போராட்டம் நடத்துவினமோ...!

## விடுதியிலிருந்து வீசப்பட்ட 'பாக்'கில் ஆயுதங்கள்!

### கொழும்பில் 40 பேர் கைது

கொழும்பு, மார்ச் 29

பம்பலப்பிட்டியில் உள்ள விடுதி ஒன்றில் இருந்து இரவு நேரம் வீசப்பட்ட 'பாக்' ஒன்றில் இருந்து ஆயுதங்கள் மீட்கப்பட்டன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கடந்த வெள்ளி இரவு 8. 40 மணியளவில் இந்தச்சம்பவம் இடம்பெற்றது.

இதைத் தொடர்ந்து அந்த விடுதியில் தங்கியிருந்த 40

(9 ஆம் பக்கம் பார்க்க)

## வலி. வடக்கு காணிச் சுவீகரிப்புக்கு ஐந்து தமிழ்க் கட்சிகள் எதிர்ப்பு!

### நேற்று கொழும்பில் கூடி விவாதித்தன

கொழும்பு, மார்ச் 29

வலி-வடக்கில் காணிச் சுவீகரிப்புக்குச் சட்ட ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் எதிர்ப்புத் தெரிவிப்பதென ஐந்து தமிழ்க் கட்சிகள் முடிவு செய்துள்ளன.

ஐந்து தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளும் நேற்று மாலை கொழும்பில் கூடிப் பலதரப்பட்ட விடயங்கள் குறித்து விரிவாக ஆராய்ந்தனர்.

இந்தக் கூட்டத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பில் என். ரவிராஜ், ஈ.பி.டி.பி. சார்பில் அதன் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, யாழ். மாவட்ட அமைப்பாளர் வி. கே. ஜெகன், அ. இராசமாணிக்கம்புளொட் சார்பில் த. சித்தார்த்தன், ஈ.பி ஆர்.எல்.எவ். சார்பில் சுரேஷ் பிரேமச்சந்திரன்,

(9 ஆம் பக்கம் பார்க்க)

## தன்னாடி முகாம் மீது நேற்றும் ஷெல் தாக்கு!

வவுனியா, மார்ச் 29

தன்னாடி இராணுவ முகாம் மீது நேற்றுப் பிற்பகல் 1 மணியளவில் விடுதலைப் புலிகள் ஷெல் தாக்குதல் நடத்தினர்.

இந்தத் தாக்குதலால் மன்னார் நகரில் பதற்றம் நிலவியதாகவும்—

மன்னாருக்கான போக்குவரத்துக்கள் பாதிக்கப்பட்டன

(9 ஆம் பக்கம் பார்க்க)

## எலும்புகள் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டன!

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்குப் பகுதியில் மீட்கப்பட்ட மனித எச்சங்களான எலும்புகள் நேற்று முன்தினம் கொழும்புக்கு விமானம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

யாழ். மேலதிக நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதனின் உத்தரவின் பேரில் எலும்புகள் சேகரிக்கப்பட்டு பெட்டிகளில்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரி - மன்னார்ப் பாதையை கைப்பற்றுவதால் பயன் இல்லை

### கல்கட் கூறுகிறார்

கொழும்பு, மார்ச் 29

ஸ்ரீலங்கா படைகளால் மேற்கொள்ளப்படும் 'போர்க் கோஷம்' நடவடிக்கை மூலம் பூநகரி மன்னார் பாதையைக் கைப்பற்றுவதால் பயன் ஏதும் கிடைக்கப் போவதில்லை என்று இந்திய இராணுவ விமர்சகர் கல்கட் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் நிலை கொண்டிருந்த இந்திய அமைதிப் படையின் தளபதியாக இருந்து தற்சமயம் இராணுவ விமர்சகராக இருக்கும் அவர் 'சண்டே ரைம்ஸ்' ஆங்கிலபத்திரிகைக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். அந்தப்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## லங்காமுடித்தவில் நாளை திருமலைக்குப் பயணிகள்

யாழ்ப்பாணம், மார்ச் 29

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கு 'லங்கா முடித்த' கப்பல் மூலம் நாளை ஒரு தொகுதி பயணிகள் அழைத்துச் செல்லப்படுவர்.

ரிக்கெட் பெற்றவர்களை இன்று காலை 9 மணிக்கு யாழ். 'ரயில் நிலையத்துக்கு பயண ஏற்பாடுகளுடன் வருமாறு சிவில் நிர்வாக அலுவலகம் கேட்டுள்ளது.

ரிக்கெட் பெறாதவர்கள் வரும்பட்சத்தில் அங்கு வைத்து ரிக்கெட் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (இ-3-க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மரண அறிவித்தல்கள்

## சண்முகம் குணரத்தினம்

ஏழாலை மேற்கை வதிவிடமாகக் கொண்ட இளைப்பாறிய புகையிரதக் கட்டடப்பகுதி ஊழியர் சண்முகம் குணரத்தினம் அவர்கள் 28-03-1999 இல் இறைபதம் சேர்ந்துள்ளார்.

அன்னார் பகவதியின் அன்புக் கணவரும் தனபாலசிங்கம், கமலாதேவி, மிதிலா, தனராசசிங்கம், ஏகாம்பரமூர்த்தி ஆகியோரின் தகப்பனாரும் சிவநாதன் பரிமளத்தின் அன்பு மாமனாரும் மதுசானின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (29-03-99) திங்கட்கிழமை காலை 10-00 மணியளவில் நடைபெற்று பூதவுடல் சப்பட்டியான் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கு. தனபாலசிங்கம்

ஏழாலை மேற்கு,
ஏழாலை.

(64296)

## தம்பு காங்கேசன்

(முன்னாள் தொலைத்தொடர்பு பரிவர்த்தனை பிரதம பொறியியலாளர், கொழும்பு)

நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு காங்கேசன் 27-03-99 அன்று கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பு சிவபாக்கியம் தம்பதிகளின் அன்பு மகனும், தேவகியின் அன்புக் கணவரும், பிரேம்நாத், ஜனார்த்தனன் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான இராசையா பரமேஸ்வரி தம்பதிகளின் மருமகனும், சற்குணம், நடராஜா (கனடா) பத்மநாதன், தணிகாசலம், சுசிலாதேவி, காலஞ்சென்ற மகாதேவன், தர்மராணி, ஆகியோரின் அன்புச் சகோதரனும், பாலசுப்பிரமணியம் (திருமலை), ஜானகி, ராமச்சந்திரன், மகேஸ்வரன் (பிரான்ஸ்), பாலச்சந்திரன் (கனடா), ஜெயராஜா, ரஞ்சினி (கொழும்பு) ஆகியோரின் மைத்துனரும், பீஷ்மன், வசந்தாதேவி (திருமலை), வசந்தராதேவி, ராணி (பிரான்ஸ்) மனோரஞ்சிதம் (கனடா), பிரேமளா, அசோகராஜா (கொழும்பு) ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்
இ. ஜெயராஜா (ஜெயம்)
(மைத்துனர்)

இல 38,3 ஆம் குறுக்குத்தெரு,
யாழ்ப்பாணம்.

(64291)

## வல்லிபுரம் நவரட்ணம்

சரசாலை வடக்கைப் பிறப்பிடமாகவும், கிளிநொச்சி கணேசபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நவரட்ணம் 27-3-99 அன்று வவுனியாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற வல்லிபுரம் தங்கம்மாவின் மகனும், ரூபவதியின் அன்புக் கணவரும், யோகவதனி, கிருஸ்ணவேணி, இந்திரகுமார் (உரும்பிராய்), ஜெயக்குமார் (சுவிஸ்), உதயகுமார் (நோர்வே), ஜெயந்தினி (ஆசிரியை, வவுனியா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், நாகரட்ணம் (யாழினி நகை மாளிகை, ஸ்கந்தபுரம்), மகாலிங்கம் (ப. நோ. கூ. ச முகாமையாளர், ஸ்கந்தபுரம்), இரஞ்சினி (உரும்பிராய்), சுதாஜினி (சுவிஸ்), ரதி (நோர்வே), பிரேம்குமார் (ஆசிரியர், வவுனியா) ஆகியோரின் அன்பு மாமனாரும், யாழினி, தினோத், ரிதுர்ஷன், ஜென்சிகா, ஜெதுர்ஷன், லதுர்ஷன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29-3-99 இன்று திங்கடகிழமை ஸ்கந்தபுரத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
ந. இந்திரகுமார்
(மகன்)

முருகன் வீதி,
உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய்

(64287)

## சண்முகம் சின்னராசா

பண்டத்தரிப்பைப் பிறப்பிடமாகவும் தற்போது அச்செழுவை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் சின்னராசா 28-03-99 நேற்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சண்முகம் பொன்னுவின் அன்புப புதல்வனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும் அரிச்சந்திரனின் [கொழும்பு] தந்தையும், தவமணி, சின்னத்துரை ஆகியோரின் சகோதரனும் கனகசபை, சறோஜாதேவி, வடிவேலு ஆகியோரின் மைத்துனரும், பத்மாவதி, பத்மநாதன், யோகநாதன் [கொழும்பு], சிவநாதன் [ஜேர்மனி], திலகவதி [கொழும்பு], மங்கையர்க்கரசி [கொழும்பு], சுந்தரலிங்கம் ஆகியோரின் மாமனாரும், நித்தியா, ஆனந்தன், நித்தியராஜ், நிதர்ஷன், நிறோயி ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று முற்பகல் 11 மணியளவில் அச்செழு மயானத்திற்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்தத் தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தகவல்
க. பத்மநாதன்
(மருமகன்)

அச்செழு,
புத்தூர் வீதி.

[64294]

# பன்னிரு திருமுறை பாராயணம்

அகில இலங்கைத் திருமுறை மன்றம் ஒவ்வொரு மாத பௌணர்மி தினங்களிலும் பன்னிரு திருறைப் பாராயணம், அகத்தியர் தேவாரத் திரட்டு முற்றோதல் ஆகிய நிகழ்ச்சிகளை ஆலயங்கள் தோறும் சென்று நடத்தி வருகின்றது.

இதற்கமைய நாளை மறுதினம் புதன்கிழமை காலை 8 மணி முதல் யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீகந்தசுவாமி ஆலய தேரடி அறுபத்தி மூவர் குருபூசை திருமடத்தில் மன்றத் தலைவர் பண்டிதர் திரு வ. பேரின்பநாயகம் தலைமையில் பாராயணம் நடைபெறும்.

நண்பகலில் மகேஸ்வர பூசையும் இடம்பெறும். இதற்கான ஒழுங்கினை தொண்டன் க. நவரத்தினம் மேற்கொண்டுள்ளார். (க)

# தென்னங் கன்று விநியோகம்

தென்மராட்சி, மார்ச் 29.

பளை லயன்ஸ் கழகத்தினர் ஆரம்ப சேவையாகப் பளைப் பிரதேசத்தில் வறுமைக்கோட்டின் கீழ்உள்ளகுடும்பங்களைச் சேர்ந்த 25 பேருக்கு தென்னங் கன்றுகளை விநியோகித்துள்ளனர்.

அண்மையில் கழகத் தலைவர்லயன் முனேஸ் துரைசிங்கம் தலைமையில் நடைபெற்றவைபவத்தில் தென்னை அபிவிருத்திச் சபை முகாமையாளர் வி. சிவச்சந்திரன் தென்னங் கன்றுகளை வழங்கி சேவையினை ஆரம்பித்து வைத்தார்.

சிறுதென்னந் தோட்டங்களில் மீள் நடுகைக்கு இந்த தென்னங் கன்றுகள் விநியோகிக்கப்படுவதாக கழகச் செயலாளர் லயன் ந. பாலச்சந்திரன் தெரிவித்தார்.

(ஐ-177)

ராஜா
யாழ்ப்பாணம்.
ராஜ்கிரன் - மீனா
ஸ்ரீவித்தியா - வடிவேல்
செந்தில் - கவுண்டமணி
மற்றும் பலர் நடித்த
என் ராசாவின் மனசிலே
இன்று காட்சிகள்
10-30, 2-00.
(சி/6877)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி
இன்று முதல்
விஜய் - ரம்பா - மகேஸ்வரி
நடித்த
என்றென்றும் காதல்
மகத்தான புதிய வெளியீடு
காட்சிகள் 10. 30, 2. 30
(பழைய நேரம்)
FAX No. 070 - 212223
FOREIGN T.P No.
0094 - 70-212223
(64168)

நாகம்ஸ்
சுன்னாகம்.
கடைசி வெற்றி வாரமாக
விஜய், விஜயகாந்த்,
யுவராணி, கௌதமி
நடித்த
செந்தூரபாண்டி
புதிய நேரப்படி காட்சிகள்
(64264)

# ஆடை தயாரிப்புதொழிலில் இளம் யுவதிகளுக்கு பயிற்சி

வட்டுக்கோட்டை, மார்ச் 29

ஆடைப் தயாரிப்பு தொழிலில் இளம் யுவதிகளுக்கு பயிற்சி வழங்கும் நிலையம் கடந்த புதன்கிழமை சண்டிலிப்பாயில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

யாழ். மாவட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் தி. சிவதெட்சணாமூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில் பிரதேச செயலாளர் நா. வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டுபயிற்சி நிலையத்தை ஆரம்பித்து வைத்தார்.

மேற்படி நிகழ்வில் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்எஸ். ஸ்ரீபதி, பண்டத்தரிப்பு கிராம உத்தியோகத்தர் மு. துரைராசா, சமூக சேவைகள் உத்தியோகத்தர் எம். அமிர்தலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

பிரதேச செயலகத்துக்கு முன்னால் உள்ள தனியார் கட்டடத்தில் ஆரம்பிக்கப்பட்ட பயிற்சிக்கு 30 யுவதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்கு ஆடை தயாரிப்பு மனைப் பொருளியல் போன்ற துறைகளில் ஒருவருடகால பயிற்சி வழங்கப்படும். (இ-12)

# கால்நடை வைத்திய அலுவலகம்

வேலணை கால்நடை வைத்திய போதனாசிரியர் மாதத்தில் இரு தடவைகள் அனலைதீவுப் பகுதிக்குச் சென்று அங்குள்ள கால்நடைகளுக்கு சிகிச்சை அளித்து வருகின்றார்.

தீவுப் பகுதியில் வேலணையில் மட்டும் தான் கால்நடை வைத்திய அலுவலகம் இயங்குவது குறிப்பிடத்தக்கது.

# மரண அறிவித்தல்கள்

## முருகேசு செல்லாச்சி

காரைநகர் மொந்திபுலத்தைச் சேர்ந்த முருகேசு செல்லாச்சி நேற்று 28-3-99 காலமானார்.

மரணச் சடங்குகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
மு. தருமலிங்கம்
(மகன்)

மொந்திபுலம்,
காரைநகர்.

(64298)

## நடராசா தங்கராசா

(Operation Manager, Eastern Zone, Bank of Ceylon)

சுண்டிக்குளியைச் சேர்ந்த நடராசா தங்கராசா 27-03-99 இல் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா—இராசம்மா தம்பதிகளின் அருமை மகனும் அமிர்தாம்பிகையின் அன்புக் கணவரும் மைதிலி (லண்டன்), வாகீசன் (பொறியியலாளர்), சதீசன் (பொறியியலாளர், சவூதி அரேபியா) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சுரேகாவின் மாமனாரும் தங்கலெட்சுமி, தனலெட்சுமி, யோகமலர், தவபாலன் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற செல்வராசா, பாலச்சந்திரன், தர்மபவான், வேணி, வாலாம்பிகை, கமலாம்பிகை, காலஞ் சென்ற யோகாம்பிகை, சிவகுமாரன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் பாலசுப்பிரமணியம், தர்மலிங்கம், சிவனேசன், மதி ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கல்கிசையில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
திருமதி செ. தங்கலெட்சுமி
(சகோதரி)

17/10, சந்தனமாதா கோயில் வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.

(64292)

## திருமதி கமலாம்பிகை தம்பையா [நாச்சியார்]

சரவணை மேற்கு, வேலணையைச் சேர்ந்தவரும் 386, கோவில் வீதி, நல்லூரில் வசித்தவருமான திருமதி கமலாம்பிகை தம்பையா 27-03-99 [சனிக்கிழமை] இரவு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நாகேந்திரர் சிதேவிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகளும், நெடுந்தீவைச் சேர்ந்த திரு சி. க. தம்பையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சிவபாதம் [செட்டிக்குளம்], கேதாரநாதன், ஜெகநாதன் [கனடா] திருமதி கமலாநிதி [கிளிநொச்சி] ஆகியோரின் பாசமிகு தாயாரும் அன்னலட்சுமி சிவஒளி, புஷ்பவதனி, கனகராசா [D S O. கிளிநொச்சி] ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவகுமார், நிரஞ்சன், ஜனகன், ஜனார்த்தனன், நிஜன், சாலினி, சிவரூபன், ஜெயந்தன், ஜெயன், கவிதா, கார்த்திகா, சஞ்சீவன், சயந்தன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும், காலஞ்சென்ற பாக்கியலட்சுமி, கனகம்மா, காலஞ்சென்ற மயில்வாகனம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற இராமலிங்கம், சிதம்பரப்பிள்ளை, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை, சின்னத்தங்கம் [லண்டன்] காலஞ்சென்ற கந்தையா ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 386, கோவில் வீதி, இல்லத்தில் [28-03-99] நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்று பூதவுடல் திருநெல்வேலி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
சி. க. தம்பையா
[கணவன்]

386, கோவில் வீதி,
நல்லூர்.

[64295]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யூகோ நிலைகள் மீது தாக்குதல் நடத்த கிளம்பிச் செல்லும் அமெரிக்க 'எவ் - 1 - 17 ' ரக விமானம் ஒன்றைப் படத்தில் காணலாம். (ஐ)

## 50 ஆண்டுகளைப் பூர்த்தி செய்யும் நேட்டோ

'நேட்டோ' எனப்படும் வட அத்திலாந்திக் ஒப்பந்த அமைப்பு நிறுவப்பட்டு 50 ஆண்டுகள் பூர்த்தி அடைகின்றன. யூகோஸ்லாவியா மீது இந்த அமைப்பு மேற்கொண்டு வரும் தாக்குதல் அதன் கடந்த 50 ஆண்டு காலவரலாற்றில் இறைமை உள்ள நாடு ஒன்றுக்கு எதிராக நடத்தும் முதலாவது தாக்குதல் ஆகும்.



பெல்கிரேட் நகரில் நேட்டோ குண்டு வீச்சுக்கு அஞ்சி பதுங்குகுழிக்குள் தங்கி இருக்கும் யூக்கோஸ்லாவிய தாயும், மகளும் (ஐ)

# எவ்-1-17 விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது!

## விமானியை மீட்டதாக அமெரிக்கா அறிவிப்பு

பெல்கிரேட், மார்ச் 29

யூகோ. நிலைகள் மீது நான்காவது நாள் வான்தாக்குதலில் ஈடுபட்டிருந்த அமெரிக்க விமானப்படையின் ஆகப் பிந்தியதயாரிப்பான எவ்-1 17 ரகநவீன போர்விமானம் ஒன்றை யூக்கோஸ்லாவியப் படையினர் சுட்டுவீழ்த்தியதாக அகிறிவிக்கப்படுறது.

விமானம் வீழ்ந்து நொருங்கியதை ஒப்புக் கொண்ட அமெரிக்கா விமானியைப் பாதுகாப்பாக மீட்டுவிட்டதாக அறிவித்துள்ளது.

தலைநகர் பெல்கிரேட்டிற்கு வடமேற்கே 50 கிலோ மீற்றர் தொலவில் உள்ள பகுதியில் சனிக்கிழமை நான்காவது நாள் வான் தாக்குதலில ஈடுபட்டிருந்த அமெரிக்க விமானமே சுட்டுவீழ்த்தப்பட்டது.

விமானம் வானில் வெடித்துச் சிதறி தீ பிழம்பாக வீழ்வதை யூகோஸ்லாவிய தொலைக்காட்சி ஒளிபரப்பியது.

நேட்டோ விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதை ஐ. நாவுக்கான யூகோஸ்லாவியத் தூதர் உறுதிப்படுத்தினர். ஆனால் தொழில்நுட்பக்கோளாறு காரணமாகவே விமானம் வீழ்ந்திருக்கலாம் என்று அமெரிக்க விமானப்படை அதிகாரிகள் தெரிவித்தனர் விமானம் வீழ்ந்த இடத்தில் இருந்து விமானியை பாதுகாப்பாக மீட்டு விட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர். ஆனால் விமானி எவ்வாறு மீட்கப்பட்டார் என்பது உடனடியாகத் தெரிவிக்கப்படவில்லை' எவ். 1-17' யுத்த விமானத்தை இழந்திருப்பது 'நேட்டோ' நடவடிக்கைகளுக்கு பலத்த அடியாக அமைந்துள்ளது. அமெரிக்க விமானப்படையின் நவீன தயாரிப்பான இந்த விமானங்கள் பக்தாத் மீதான தாக்குதல்களிலும் தீவிர பங்காற்றி இருந்தன. (ஐ)

## கண்டனம்

யூகோஸ்லாவியா மீதான நேட்டோவின் தாக்குதல்களை கியூபா கண்டித்துள்ளது.

எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாத குற்றச் செயல் இது என கியூபா கூறியுள்ளது. உலக அமைதிக்குப் பங்கம் விளைவிக்கும் அமெரிக்காவின் செயல் இது என்று கியூபா அரசாங்க பேச்சாளர் தெரிவித்தார். (ஐ)

## 'நேட்டோவின் பாசிஸம்'

ஐக்கிய நாடுகள் சபை. மார்ச் 29

''யூகோஸ்லாவியா மீதான நேட்டோவின் தாக்குதல் 1930 களில் எதியோப்பியா மீது இத்தாலிய பாஸிஸவாதிகள் மேற்கொண்ட ஆக்கிரமிப்புக்குச் சமனானது. அன்று எதியோப்பியாவுக்கு இத்தாலிய பாஸிஸவாதிகளால் ஏற்பட்ட நிலை; இன்று யூகோஸ்லாவியாவுக்கு அமெரிக்க — நேட்டோ நாடுகளால் ஏற்பட்டிருக்கிறது.''

யூகோஸ்லாவியாவின் ஐ. நா. பிரதிநிதி விளடிஸ்லேவ் ஜவனோவிக் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கடந்த புதனன்று ஐ. நா. பாதுகாப்புச் சபைக் கூட்டம் நடைபெற்றசமயம் அவர் ஐ. நா. சபையில் இதனைத் தெரிவித்தார்.

''ஐ. நா. சபை ஒரு செயலிழந்த அமைப்பாக மாறிவிடாது என நம்புகிறேன். பல நாடுகளின் அமைப்பு என்ற வகையில் அது தற்போது முக்கியமான கட்டத்தைச் சந்தித்திருக்கிறது. அது சரியான பாதையைத் தெரிவுசெய்யும் என நம்புகிறேன்'' — என்று யூகோ பிரதிநிதி அங்கு மேலும் தெரிவித்தார். (ஐ)

# பெல்கிரேட்டிற்கு இராணுவ உதவிகள் வழங்கப்படும் என்கிறது ரஷ்யா!

மொஸ்கோ, மார்ச் 29

அமெரிக்கா தலைமையிலான 'நேட்டோ' நாடுகள் யூகோஸ்லாவியா மீது தன்னிச்சையாக நடத்தி வரும் வான் தாக்குதல்கள் நிறுத்தப்படாவிட்டால் பெல்கிரேட்டிற்கு இராணுவ உதவிகளை வழங்கப்போவதாக ரஷ்யா எச்சரித்துள்ளது.

யூகோஸ்லாவியா நெருக்கடியில் ரஷ்யாவின் நிலைப்பாட்டைச் சீனாவும் இந்தியாவும் ஆதரித்துள்ளன மிகவும் பலவீனமான நிலையில் இருக்கும் ரஷ்யா தற்போதைய நெருக்கடியில் ஒரு சங்கடமான நிலையில் இருந்து வருகின்ற போதிலும் பெல்கிரேட் அரசுக்குத் தொடர்ந்து தனது ஆதரவைத் தெரிவித்து வருகிறது. ரஷ்ய அதிபர் பொறிஸ் யெல்டசின் யூகோ. அதிபர் மிலோசெவிக்கு ஆதரவுக் கடிதம் ஒன்றை ஏற்கனவே அனுப்பியுள்ளார்.

இதனிடையில் ரஷ்ய நாடாளுமன்றமான 'டூமா' நேற்று முன்தினம் அவசரமாகக் கூடி யூகோஸ்லாவிய நிலைமையை விவாதித்தது. நேட்டோவின் தாக்குதலை அது கடுமையாகக் கண்டித்தது. 'நேட்டோ' நாடுகளுடனான உறவை மொஸ்கோ துண்டித்து விட்டதுடன் மேற்கொண்டு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து இராணுவத்துடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருவதாகக் கூறி உள்ளது.

முன்னதாக யூகோ மீதான தாக்குதல்களை நிறுத்த கோரி ஐ. நா. பாதுகாப்புச் சபையிடம் ரஷ்யா சமர்ப்பித்த பிரேரணையை பாதுகாப்புச்சபை நிராகரித்ததால் ரஷ்யா சீற்றமடைந்துள்ளது எனினும் பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள ரஷ்யாவுக்கு கடன் வழங்குவது தொடர்பாக பேச்சு நடத்துவதற்காக உலக வங்கி அதிகாரி ஒருவர் மொஸ்கோவில் தங்கி உள்ளதால் மேற்குலக நாடுகளை இந்தத் தருணத்தில் பகைத்துக் கொள்வது ரஷ்யாவுக்குப் பெரும் பாதிப்பாகவே அமையும்.

எனினும் யூகோஸ்லாவிய நெருக்கடியில் ரஷ்யா எடுத்து வரும் நிலைப்பாடு பனிப் போர்க் காலத்தின் சாயலை மீண்டும் பிரதிபலிப்பதாக அவதானிகள் கூறுகின்றனர். (ஐ-க)

# 'நேட்டோவின்' தரைப் படைகள் கோசோவோவை ஆக்கிரமிக்கும்?

கிரானா, மார்ச் 29

'நேட்டோ' தாக்குதல்கள் தீவிரமடைந்துவரும் அதேவேளை கொசோவோ மாகாணத்தில் அல்பேனிய இனத்தவர்கள் மீதான தாக்குதல்களை சேர்பியர்கள் தீவிரப்படுத்தி இருப்பதை அடுத்து பல்லாயிரக்கணக்கான மக்கள் அங்கிருந்து வெளியேறத் தொடங்கி உள்ளனர். நேற்றுக் காலைவரை சுமார் 50 ஆயிரம் பேர் எல்லையைத் தாண்டி அல்பேனியாவின் வடக்குப் பகுதிக்குச் சென்றிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

சில ஆயிரக்கணக்கான அல்பேனியர்கள் இத்தாலியின் கரையோரப்பகுதிக்கும் சென்றடைந்துள்ளனர்.

அகதிகள் பெரும் எடுப்பில் வெளியேறுவதால் அடுத்த நடவடிக்கையாக கொசோவோப் பகுதிக்குள் 'நேட்டோ' வின் தரைப்படைகள் பிரவேசிக்கலாம் என்று பால்கன் பிராந்திய நெருக்கடியை உன்னிப்பாக அவதானித்துவரும் பாதுகாப்பு ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

முன்னாள் யூகோஸ்லாவிய குடியரசான மசடோனியாவில் உள்ள 'நேட்டோ' தரைப்படையின் கவச வாகனங்கள் கொசோவோ எல்லையோரமாக நகர்த்தப்பட்டிருப்பதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவித்தன.

அமெரிக்க விமானப் படையின் சண்டை விமானத்தை யூகோஸ்லாவியா சுட்டு வீழ்த்தி இருப்பதை அடுத்து தாக்குதல்கள் மேலும் விரிவுபடுத்தப்படும் என்று 'நேட்டோ' அறிவித்துள்ளது நேட்டோ தரைப்படைகளும் விரைவில் தாக்குதல் [illegible] (ஐ)

## உலக அரங்கில்


# ஆங்சான் சூகியின் கணவர் மரணம்

லண்டன், மார்ச் 29

மியான்மாரில் ஜனநாயகம் கோரும் அமைப்பின் தலைவியான ஆங் சான் சூகியின் கணவர் மைக்கல் அரிஸ் தனது 53 ஆவது வயதில்— பிறந்ததினத்தன்று— புற்று நோயால் காலமானார்.

லண்டன் மருத்துவ மனை ஒன்றில் சிகிச்சை பெற்று வந்த தமது கணவரைச் சென்றுபார்க்க ஆங் சான் சூகி விரும்பியபோதும் தான் நாட்டைவிட்டுச் சென்றால் மீண்டும் திரும்பிவர இராணுவ ஆட்சியாளர்கள் அனுமதிக்கமாட்டார்கள் என்ற அச்சத்தினால் அதைத் தவிர்த்து வந்தார்.

கடந்த மூன்று வருடங்களாக சூகி தனது கணவரைச் சந்திக்கவில்லை; (ஐ)



சீ. என். என். வெளியிட்ட இப்படங்களில்— அமெரிக்க கொடி ஒன்று எரிக்கப்படுவதையும்—, யூகோ அதிபர் மிலோசவிக் தனது அதிகாரிகளுடன் சேதங்களைப் பார்வையிடுவதையும்— அமெரிக்க அதிபர் சேர்பியர்களுக்காக தொலைக் காட்சியில் உரையாற்றுவதையும்— பெல்கிரேட் நகரில் குண்டு வெடிப்பினால் எழும் புகை மண்டலத்தையும்— காணலாம். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

நவக்கிரி, பன்னாலை தெல்லிப்பழையைச் சேர்ந்த திருமதி கிருஷ்ணர் வரலக்சுமி என்பவரது தே. அ. அட்டை (இல. 508110294V) விசேட அடையாள அட்டை (இல. 0907006094) என்பன யாழ். தெல்லிப்பழை ஊடாக செல்லும் பஸ்ஸில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் ஜெயதனா தொலைத் தொடர்பு நிலையம் கே. கே. எஸ். வீதி, சுன்னாகம் என்ற முகவரியில் ஒப்படைத்துதவவும். T. P. No. 070 - 212262.

(64254)

து. மகாலிங்கம் ஆகிய எனது மின்சார அனுமதிப் பத்திரமும் 6630 ரூபா மணியோடரும் குளப்பிட்டிச் சந்திக்கும் நாச்சிமார் கோயிலுக்கும் இடையில் 26-03-99 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து மினி மகாலிங்கம், 958/47, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும்.

(64277)

### பணிப்பெண் தேவை

வீட்டுப்பணிகள் செய்வதற்குப் பணிப்பெண் தேவை. வளர்க்கப்படும் பெண்ணாக கருதப்படுவர். அனாதரவானவர்கள் விரும்பத்தக்கது. சம்பள விவரங்கள் நேரில் தொடர்பு: செ. யோகரத்தினம் 187 மைல் போஸ்ட், மீசாலை, சனிக்கிழமை காலை 10-00 மணிக்கு சந்திக்கவும் தபால் மூலமும் தொடர்பு கொ ளலாம்

(சி/6938)

### விற்பனைக்கு

பலாலி பஸ் கொம்பனி ஒழுங்கையால் மானிமனை ஒழுங்கையில் அமைந்துள்ள 3 பரப்புக் காணியுடன் சகல வசதிகளும் உள்ளடக்கிய வீடு விற்பனைக்கு உண்டு. தர்மரெட்ணம் C/O பாஸ்ரர் விக்ரர் தர்பலிங்கன், இல. 29, ஆசீர்வாதம், லேன் யாழ்ப்பாணம் அல்லது லோகேந்திரன் மானிமனை ஒழுங்கை, மல்லாகம் என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளவும்.

(64214)

7 நாள் வளர்ந்த கலப்பின (சைலைன் வெள்ளை, பிறவுண்) கோழிக்குஞ்சுகள், நல்லின சேவல்கள், அடை முட்டைகள், இரும்புக்கேற் (10 அடி), தீராந்திகள, நிலைகள் (6'' - 4''), தண்ணீர் மோட்டர் (0. 75hp) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 40/6, புகையிரத கிழக்கு வீதி, சுந்தர் மடம் (செல்வநாகபூசணி அம்மன் கோயில் அருகில்)

(64284)

### யாழ்ப்பாணம்

மொட்டுக்கள் மலர்கின்றன, அடிமையல்ல நாடகங்களை வானொலியில் கேட்டீர்களா? அவற்றை எழுதிய அராலியூர் ந. சுந்தரம்பிள்ளையின் நூல்கள் 1, அக்கரைச் சீமையில் நாவல் 2. யாழ்ப்பாணத்தில் அந்த ஆறு மாதங்கள் 3. யாழ்ப்பாணமா? கொழும்பா? ரூபா 50/

(64286)

### தேவை

பாவித்த பழைய தமிழ், ஆங்கில தட்டச்சு இயந்திரங்கள், றோணியோ இயந்திரங்கள் உடன் தேவை. நியாயமான விலைக்கு எடுக்கப்படும். தொடர்பு: மருதம் மருதலிங்கம், 66, மணிக்கூட்டு வீதி (ஆஸ்பத்திரி முன்பாக), யாழ்ப்பாணம்.

(64223)

தையல் மெசின். பெண்கள் — சிறுவர் ஆடைகள் தைப்பவர்கள். தொடர்பு: 55/1, சீனியர் ஒழுங்கை, கலட்டி. 207, பலாலிவீதி, கோண்டாவில். (64227)

# உருளைக்கிழங்குச் செய்கையில் விவசாயிகள் நாட்டம் குறைகிறது

மூளாய், மார்ச் 29

யாழ். குடாநாட்டுக்கான கப்பல்போக்குவரத்து சீரின்மை காரணமாக உள்ளூர் உருளைக்கிழங்குச் செய்கை பாதிப்படைந்து வருகிறது.

மேற்படிசெய்கைக்காக கப்பல் மூலமாகவே விதை உருளைக்கிழங்கு குடாநாட்டுக்கு எடுத்துவருவது வழக்கம். அண்மைக்காலங்களில் சீரற்ற கப்பல் போக்குவரத்துக் காரணமாக விதை உருளைக் கிழங்கு எடுத்துவரப்படுவதில் நீண்ட தாமதங்களும், பல சிரமங்களும் எதிர்நோக்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறான சூழ்நிலையில் முற்பணம் செலுத்தி விதை உருளைக்கிழங்கைப் பெற்றுக் கொள்வதில் விவசாயிகளின் ஆர்வம் குறைந்துவிட்டது.

மானிய அடிப்படையில் விதை உருளைக்கிழங்கை விவசாயிகளுக்கு வழங்குபடுவதும் நிறுத்தப்பட்டுவிட்டது. இதனால் எதிர்காலத்திலும் யாழ் குடாநாட்டில் உருளைக்கிழங்குச் செய்கை பாதிப்படையக் கூடிய சூழ்நிலையே காணப்படுவதாக விவசாயிகள் கவலைதெரிவிக்கின்றனர்.

(ஐ-99)

## உடற்கல்வி மாணவருக்கு

யாழ். பல்கலைக்கழக உடற்கல்வி கற்கை நெறி மாணவர்கள் அனைவரையும் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு உடற்கல்வி விரிவுரை மண்டபந்துக்குத் தவறாது வருகை தருமாறு உடற்கல்வி கற்கை நெறி இணைப்பாளர் கேட்டுள்ளார்.

(உ-க)

## தவறி விழுந்து மரணம்

யாழ்ப்பாணம் மார்ச் 29

பழுதடைந்திருந்த மின் விசிறியை வீட்டுக் கூரையின் உட்பகுதியில் சீலிங் பொருத்தும் மரத்தில் இருந்து திருத்திக்கொண்டிருந்த வேளை தவறிக் கீழே விழுந்த ஒருவர் உயிரிழந்தார்,

உரும்பிராய் மேற்கில் கடந்த 23 ஆம் திகதி இடம் பெற்ற இச்சம்பவத்தில் கதிரவேலு மகாதேவன் (வயது 39) என்பவரே மரணமானார். இவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மூன்று நாள்களின் பின் அங்கு மரணமானார்.

இறக்கும்வரை இவரின் உடற்பகுதி செயலிழந்து இருந்தது,

(ஐ-15)

## கந்தபுராணப் படிப்பு

வடமராட்சி, மார்ச் 29

தும்பளை நெல்லண்டை அருள்மிகு பத்திரகாளி அம்பாள் ஆலயத்தில் கந்தபுராணப் படிப்பு கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றது.

இம் மாதம் 31 ஆம் திகதி புதன்கிழமை திருக்கல்யாணப் படிப்புடன் கந்த புராணப் படிப்பு நிறைவுறும். மறுநாள் அன்னதானம் இடம் பெறும்.

ஐ-173)

## உதயன்

Ⓤ உதவி ஆசிரியர்கள்

Ⓤ மொழி பெயர்ப்பாளர்

பத்திரிகைத்துறையில் அல்லது வேறு ஏதாவது வெகுஜன ஊடகத்துறையில் ஐந்து வருடங்களுக்குக் குறையாத தொழில் அனுபவமும், ஆகக் குறைந்தது இரண்டு வருடங்கள் உதவி ஆசிரியராகவும் பணி புரிந்த தகுதியுள்ளோர் விண்ணப்பிக்கலாம். 40 வயதுக்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது இரவுப்பணி செய்யத்தக்க உடல் ஆரோக்கியம் அவசியம். ஆங்கில அறிவும் மொழிபெயர்ப்பு ஆற்றலும் உள்ளவர்களுக்கு முன்னுரிமை தரப்படும்.

ஆங்கிலத்தில் மிகுந்த தேர்ச்சியும் தமிழில் பாண்டித்தியமும் உடையவர்களிடமிருந்து மொழிபெயர்ப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. செய்திகள், கட்டுரைகளை பத்திரிகைக்கு ஏற்ற வகையில் ஆங்கிலத்தில் இருந்து தமிழுக்கு மொழிபெயர்த்த மூன்று வருட அனுபவம் தேவை. தமிழிலிருந்து ஆங்கிலத்துக்கு மொழிபெயர்க்கக்கூடிய திறமை உடையவர்களுக்கு விசேட முன்னுரிமை தரப்படும். இரவுப் பணி செய்வதற்கு தயாராக இருக்க வேண்டும்.

பூரண சுயவிவரங்களுடன் 3 - 4 - 1999 ஆம் திகதிக்குப் பிந்தாமல் விண்ணப்பிக்கவும்.

பிரதம ஆசிரியர்
உதயன் - சஞ்சீவி
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## திருமண அழைப்பு

**மணமகன்:** திருவளர் செல்வன்
பா. மதியழகன்
(யாழ். போதனா வைத்தியசாலை)
சுளிபுரம்.

**மணமகள்:** திருவளர் செல்வி
லோ. நந்தினி
வண்ணார்பண்ணை.

**முகூர்த்தம்:** 01–04 1999 வியாழக்கிழமை
முற்பகல் 8 மணி 52 நிமிஷம்—
10 மணி 43 நிமிஷம்.

**இடம்:** யாழ். வண்- வடமேற்கு, கேசாவில் முத்து விநாயகர் ஆலயம்.

**வரவேற்பு உபசாரம்**

02–04–1999 வெள்ளி பிற்பகல் 3 மணி - இரவு 7 மணி, மணமகன் இல்லம், சுளிபுரம்.

உறவினர்களையும், நண்பர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இரு வீட்டார் அழைப்பு:

திருவாட்டி
புவனேஸ்வரி பாஸ்கரதாஸ்,
திசைமனை,
சுளிபுரம்.

திரு.
தா.சு.லோகநாதனும்
[ஜே. பி], பாரியாரும்,
41, கேசாவில் பிள்ளையார்
கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

[64268]

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்



அமரர்

**ஆறுமுகம் துரைராஜா**

(முன்னாள் சாரதி - கொழும்பு)

மண்ணுலகில் 15 - 09 - 1935 விண்ணுலகில் 27 - 02 - 1999

அன்பின் உறைவிடமாய் அரவணைத்து உரமூட்டி
பண்பான நெறிகாட்டி பாசமிகு உணர்வூட்டி
உம் வழியே எம் வழியாய் தொடர்வோமாக.

இச் செய்தியைக் கேட்டு தொலைபேசி மூலமாகவும், நேரிலும் வந்து அனுதாபச் செய்தியைக் கூறியவர்களுக்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று 29- 03 - 1999 திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

மனைவி: தேவி,
பிள்ளைகள்: விமலா (காலஞ்சென்ற பாபு) ஜெசித்தா, உதயநிதி, (குவைத்), கோணேஸ்வரன் (குவைத்), பிறேமசிறி, பாமினி, சகோதரர், சகோதரிகள்,
மருமக்கள்: செல்வம் (வெற்றிலைக்கடை), சங்கரலிங்கம், சந்திரா,
பேரப்பிள்ளைகள்: கமிலா, கவிஞ்சன், கவிஸ்ரா, பிறவுண்சன், நிக்சன், நியூட்டன், நிறோஜினி, நிதர்சனா, நினோகா, உசாந்தன், துசாந்தன், பாதுஷா, பெறாமக்கள்.

க. கவிஞ்சன் (பேரன்)
கொட்டடி.

(64289)

## காசநோய் தினம் அனுஷ்டிப்பு

தென்மராட்சி, மார்ச் 29

யாழ்ப்பாணம் மார்புநோய் சிசிச்சைப் பிரிவில் கடந்த புதன்கிழமை காசநோய் தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

மார்பு நோய் வைத்திய நிபுணர் டாக்டர் (திருமதி) புவனேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் சிகிச்சை பெறவந்த நோயாளர்களும் மற்றும் பொது மக்களும் கலந்து கொண்டனர்.

காசநோய் தடுப்பு முறைகளும், பராமரிப்பு முறைகளும் பற்றி மருத்துவதாதி திருமதி கணபதிப்பிள்ளை, ஆய்வுகூட உத்தியோகத்தர் இம்மானுவல் உட்பட பலர் உரையாற்றினர்.

(ஐ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவை

சாவகச்சேரியில் புதிதாகத் தொடங்கவிருக்கும் ஐஸ்கிறீம் கடைக்கு ஐஸ்கிறீம் தயாரிப்பதில் அனுபவம் உள்ளவர்கள் தேவை. நேரில் வரவும். சம்பளம் பேசித் தீர்மானிக்கலாம்.

கிருயோன் குளிரகம்
இல. 2, நவீன சந்தை,
சாவகச்சேரி.

(64238)

# மங்களகரமான திறப்பு விழா

இன்று 29-03-99 திங்கட்கிழமை
பிற்பகல் 1.14 மணிக்கு [பழைய நேரம்]
மொயில் கொம்யூனிக்கேசன்

என்னும் ஸ்தாபனத்தை ஆரம்பிக்க உள்ளோம். உள்நாட்டு, வெளிநாட்டுத் தொலைத் தொடர்புகளை மிகவும் அமைதியான சூழலில் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.

உள்நாட்டுத் தொடர்பு: 070-212390
வெளிநாட்டுத் தொடர்பு: 00-94-70 212390
இரவு பகல் சேவை

## மொயில் கொம்யூனிக்கேசன் (மல்ரி ஒயில்)

[இணுவில் ஆஸ்பத்திரி முன்புறம் — 100 யார்]
கே. கே. எஸ். றோட், இணுவில்.

[64280)

# தொழில்வாய்ப்புத் தகவல் மையங்கள்

# பிரதேச செயலகங்களில் இயங்கும்

யாழ். மாவட்டத்தில் அனைத்துப் பகுதிகளிலும் மீண்டும் தொழில் வாய்ப்புத் தகவல் மையம் செயற்படவிருக்கிறது.

அண்மைக் காலம் வரை செயற்படாமல் இருந்த மேற்படி தொழில்வாய்ப்புத் தகவல் மையங்கள் அனைத்தையும் இயங்க வைப்பதற்கு யாழ் செயலகம் நடவடிக்கை எடுததுள்ளது.

அனைத்துப் பிரதேச செயலகங்களிலும் செயற்படும் வகையில் 1994 ஆம் ஆண்டு ஆரம்பித்து வைக்கப்பட்ட இத்தொழில் வாய்ப்புத் தகவல் நிலையங்களின் செயற்பாட்டை மீண்டும் ஆரம்பிக்கும்படி பிரதேச செயலகங்கள் அனைத்துக்கும் யாழ். செயலகத்தால் பணிப்புரை செய்யப்பட்டுள்ளது.

தொழில் வாய்ப்புப்பெற விரும்புவோர் தமதுபகுதி பிரதேச செயலகத்தில் இயங்கும இத்தொழில் வாய்ப்புத் தகவல் நிலையத்துடன்தொடர்பு கொண்டு தகவல்களை அறிந்து கொள்ளலாம் மேலும் தமது கல்வித்தகைமை மற்றும் தொழில்சார்தகைமைகள் குறித்தும் பதிவு செய்து கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (ஐ-99)

# சுற்றிவளைப்பு

நெல்லியடி, மார்ச் 29

அல்வாய் தெற்குப் பகுதி நேற்று முன்தினம் காலை முதல் படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதலுக்கு உட்படுத்தப்பட்டது.

பொதுமக்கள் அனைவரும் பொது இடங்களுக்கு அழைக்கப்பட்டு அவர்களின் அடையாள அட்டைகள் பரிசோதிக்கப்பட்டன.

# தபால் பொதிகள் வந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 29

கடந்த வெள்ளியன்றுயாழ். வந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுக் கப்பலில் 85 தபால் பொதிகள் எடுத்து வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதே கப்பலில் இங்கிருந்து 32 தபால் பொதிகள் எடுத்துச் செல்லப்பட்டதாக யாழ். பிரதம தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ - 4)

# லங்காமுடித்த வந்தது

யாழ்ப்பாணம், மார்ச் 29

திருகோணமலையில் இருந்து பயணிகளுடன் புறப்பட்ட லங்காமுடித்த நேற்று முன்தினம் காலை காங்கேசன் துறைக்கு வந்து சேர்ந்தது.

மேற்படி கப்பலில் வந்து சேர்ந்த சுமார் ஆயிரத்து 200 பேரும் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்கள் மூலமாக காங்கேசன் துறையில் இருந்து யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆகிய பகுதிகளுக்கு நேற்று மாலை அழைத்து வரப்பட்டிருந்தனர். (இ-7-15)

# மருந்து வகை விநியோகம்

யாழ்ப்பாணம், மார்ச் 29

வலி கிழக்கு பிரதேசசபையின் கீழ் இயங்கும் ஆயுர்வேத வைத்தியசாலைக்குத் தேவையான மருந்து வகைகள் தற்போது விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன என்று வலி. கிழக்குப் பிரதேசசபை அறிவித்துள்ளது. (இ-7)

# ஜேர்மன் தடுப்பு முகாமில் தற்கொலை

நெல்லியடி, மார்ச் 29

சொந்த நாட்டுக்குத் திருப்பி அனுப்பவென ஜேர்மனியில் உள்ள தடுப்புமுகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வடமராட்சிவாசி ஒருவர் மனவிரக்தியினால் தடுப்பு முகாமில் வைத்து கழுத்தில் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

வடமராட்சி புலோலிதெற்கைச் சேர்ந்தவேலுப்பிள்ளை பாலச்சந்திரன் (வயது 39) என்பவரே இவ்வாறு தற்கொலை செய்து கொண்டவராவார். இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை இடம் பெற்றது.

1994 ஆம் ஆண்டு இவர் ஜேர்மனிக்கு அகதி அந்தஸ்து கோரிச் சென்றவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(இ—7-109)

## புதுவருடத்தை ஒட்டி

# உலர் உணவு நிவாரணம் முன்கூட்டியே கிடைக்கும்

மூளாய் மார்ச் 29

புதுவருடத்தை முன்னிட்டு உலர் உணவு நிவாரண விநியோகத்தை சித்திரை மாதம் முதலாம் வாரத்தில் மேற் கொள்வதற்கு யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

73 'ஏ', 'பி' புள்ளிகளுக்குரிய நிவாரண விநியோகத்தையே இவ்வாறு விரைவுபடுத்தி வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. (ஐ-99)

# கண்ணீர் அஞ்சலி

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழக உப செயலாளரான

திரு. க. பற்குணநாதன்
அவர்களின் அன்புத் தந்தையார்

## திரு. சுப்பையா கனகசபை

அவர்களின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகம்.

(64283)

# வலி. கிழக்கு பிரதேச சபை, நீர்வேலி

கோப்பாய், நீர்வேலி, புத்தூர்,
அச்சுவேலி, உரும்பிராய்
உப அலுவலகங்கள்.

1987 ஆம் ஆண்டின் 15 ஆவது இலக்க
பிரதேச சபைகள் சட்டம்

# ஆதனவரி பற்றிய அறிவித்தல்

1987 ஆம் ஆண்டின் பிரதேசசபைகள் கட்டளைச் சட்டம் இல. 15 இன் கீழ் அதற்கு உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் சார்பாக, ஆதனவரி அறவீடு சென்ற வருடம் அறவிடப்பட்ட வரி விகிதத்தின் பிரகாரம் 1999 ஆம் ஆண்டு அறவீடுசெய்யப்பட வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

1998 ஆம் ஆண்டு வரையுள்ள ஆதனவரியை நிலுவையின்றிச் செலுத்துவதுடன், 1999 ஆம் ஆண்டு ஒவ்வொரு காலாண்டுக்குமுரிய வரியை அந்தக் கந்தாயத்தின் முதல்மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டுக்கான வரியின் 5% கழிவு வழங்கப்படும்.

குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியைச் செலுத்தத் தவறின் வசிப்பிடங்களுக்கும், வெற்றுக் காணிகளுக்கும முறையே 15 வீதமும், ஏனைய ஆதனங்களுக்கு 20 வீதமும் விறாந்துக் கட்டணமாக வரியுடன் சேர்த்துச் செலுத்தப்படல் வேண்டும்.

எனவே தங்கள் ஆதனங்களுக்குரிய வரிகளை அந்தந்த உப அலுவலகங்களில முழுமையாகச செலுத்தி, வரிக் கழிவுகளைப் பெற்று, சபையுடன் ஒத்துழைக்குமாறு வரியிறுப்பாளர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பு:–

1. 1997 ஆம் ஆண்டு முடியவுள்ள வரி நிலுவைகள் செலுத்தப்பட்ட பின்பே 1998 ஆம் ஆண்டுக்கான வரி ஏற்றுக் கொள்ளப்படும்.
2. சேதமடைந்தும், காலியாகவுள்ளதுமான ஆதனங்களுக்கான வரிவிலக்கின் பொருட்டான விண்ணப்பங்கள் அந்தந்த உப அலுவலகங்களில் 30 - 04 - 1999 ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3. ஆதனவரி நிலுவை சம்பந்தமாக தனிப்பட்ட அறிவித்தல்கள் வழங்கப்படமாட்டாது. ஆதன உரிமையாளர்களும், அவர்கள் இல்லாதவிடத்து வாடகைக் குடியிருப்பாளர்களும் சம்பந்தப்பட்ட உப அலுவலகங்களுடன் தொடர்பு கொண்டு நிலுவைகளைச் செலுத்தி, எம்முடன் ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பூ. குணசிங்கம்
(தவிசாளர்)

வலி. கிழக்கு பிரதேசசபை,
தலைமை அலுவலகம், நீர்வேலி,
25 - 03 - 1999.

(சி/6935)

**UNIVERSITY OF JAFFNA**

## Professor S. Mageswaran
Memorial Lecture

**"INSECTICIDAL COMPOUNDS FROM SRI LANKAN PLANTS"**

By

**Professor Vijayakumar**
Senior Professor and Head of the Department
Department of Chemistry
University of Peradeniya


(This paper will be presented by
Prof. V. K. Ganesalingam)

VENUE: **Mageswaran Block**
Department of Chemistry
DATE: **30th March 1999**
TIME: 3.00 p.m. (SLT)
CHAIRMAN:
**Professor P. Balasundarampillai**
Vice - Chancellor
University of Jaffna

ALL ARE WELCOME

(64240)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு
15 — 11 — 1946

உதிர்வு
29 — 03 — 1998

## அமரர் கா. ஜெயராஜா

ஆண்டொன்று சென்றதையா
ஆறவில்லை எம்துயரம்
மாண்டகதை மறந்ததையா
மலர் முகமே தெரியுதையா
மீண்டு இங்கு வாருமையா
விழித் தெமைப் பாருமையா

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்.

அன்பு மனைவி
ஜெ. விமலாவதி.

சுன்னாகம், தெற்கு,
சுன்னாகம்.

(64253)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி

24-03-99 இல் காலமான எமது சக மாணவன்

இந்திரகுமார்

அவர்களின் அன்புச் சகோதரன்


### க. கிருஷ்ணமூர்த்தி

அவர்கட்கு எமது அஞ்சலியைச் செலுத்துவதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகிறோம்.

2 ஆம் வருட மாணவர்கள்,
விஞ்ஞானபீடம்.

(64285)

## 6- ம் மாத நினைவஞ்சலி



அமரர்

### நல்லதம்பி சபாரத்தினம்

மலர்வு 1944 – 05 – 05

உதிர்வு 1998 – 09 – 29

எமது குடும்பத்தின் ஒளிவிளக்காகத் திகழ்ந்து எமது உயர்விற்கு வித்திட்டு ஐம்பத்து நான்காண்டு காலம் இப்புவியில் இனிதே வாழ்நது கொழும்புநகருக்கு பிரயாணம் மேற்கொண்டவேளையில் கடந்த 29-09-1998 லயன்எயர் விமான விபத்தில் சிக்கி எம்மைவிட்டுப் பிரிந்து சென்ற எமது தந்தையான அரிய தெய்வத்தை எங்கள குடும்பத்தலைவரை இந்நாளில் நினைவு கூர்ந்து அவரின் ஆன்மா சாந்தியுற்று நற்கதிபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, பிள்ளைகள்.

நாகர்கோயில் மேற்கு,
நாகர்கோயில்.

(64098)

## கண்ணீர் அஞ்சலி

திருமதி

### ஆச்சிமுத்து பசுபதி

(முகமாலை — எழுதுமட்டுவாழ்)

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உத்தியோகத்தர்

ப. கனகரத்தினம் அவர்களின்

அன்புத் தாயார்

திருமதி ஆச்சிமுத்து பசுபதி அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன், அன்னாரின் ஆத்ம சாந்திக்காகவும் பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிச்சங்கம்,
பச்சிலைப்பள்ளி பிரதேசசபை,
பளை.

(C/6937)

## ஈராண்டு நினைவலைகள்

உதயம் 27 – 02 – 1975



அஸ்தமனம் 29 – 03 – 1997

அமரர்

### தர்மராசா ஜனார்த்தனன்

(ஜெனா, மோகன்)

திதி: 29–03–1999

விடியலும் வாழ்வும் வினாவாகிப் போன நாட்டிலே அன்பினிலே சிறந்தாய் பண்பினிலே உயர்ந்தாய் உயர வளர்ந்தாலும், கொடையில் சிறந்தாலும் இம் மண்ணில் நீ தோன்றியதால் உன்வாழ்வும் வினாவாகிப் போனதோ?

இந்த நாட்டைக்காக்க வந்தவர்களே தாக்க வந்தவர்களாகி விட்டார்கள் என்று எச்சரிக்கத் தானோ எமன் உன் பெயரை உச்சரிக்க வைத்தான்!

ஈராண்டு சென்றாலும் இதயக் குமுறல் மாறாது! எங்கள் இதயம் இனித் தேறாது!

தினம் உன் பிரிவால் தவிக்கும்:
அன்பு அம்மா, சகோதரர்கள்.

கோவளம், காரைநகர்.

(64251)

## இரத்மலானையில் பெரும் தீ விபத்து

கொழும்பு, மார்ச் 29

இரத்மலானையிலுள்ள பெயின்ற் உற்பத்தி தொழிற்சாலை ஒன்றில் நேற்று முன்தினம் பெரும் தீ விபத்து ஏற்பட்டதைத் தொடர்ந்து அப்பகுதி முழுவதும் ஒரே புகை மண்டமாகக் காட்சியளித்தது. (இ-5-7)

## 3 இளைஞர்கள் கைது

கொழும்பு, மார்ச் 29

கொழும்பு கறுவாக்காட்டுப் பகுதியில் நேற்று முன்தினம் காலை விடுதலைப்புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் மூன்று தமிழ் இளைஞர்கள் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த மூன்று இளைஞர்களும் விடுதலைப்புலிகள் இயக்க முக்கிய உறுப்பினர்கள் என்று தமக்குக் கிடைத்த தகவல்களை யடுத்தே அவர்களைக் கைது செய்ததாக பொலீஸார் தெரிவித்தனர். (ஐ-5-7)

## ஆட்ட நாட்டுக் கூத்து

யாழ்ப்பாணம், மார்ச் 29

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் 'வேழம் படுத்த வீராங்கனை, 'ஆட்ட நாட்டுக் கூத்து வடமராட்சியில் முதல் முறையாக மேடையேறவுள்ளது.

நெல்லியடி மத்திய மகா வித்தியாலத்தில் எதிர்வரும் 31 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 .30 மணிக்கும் பிற்பகல் 2 . 30 மணிக்கும் இரு காட்சிகளாக மேற்படி கூத்து நடைபெறவுள்ளது, (க.)

## விசேட பொலீஸ் பிரிவு

மோசடிகள், கொடுக்கல் — வாங்கல்கள், காசோலை மோசடிகள் போன்றவை தொடர்பான பிணக்குகளை விசாரணை செய்வதற்கு யாழ். தலைமைப் பொலீஸ் நிலையத்தில் விசேட விசாரணைப் பணியகம் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிணக்குகள் தொடர்பாக யாழ். பொலீஸ் நிலையத்தில் பொதுமக்கள் தமது முறைப்பாடுகளைத் தெரிவிக்கலாம் என்று பொலீஸ் நிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-5)

## சதாவதானி குருபூசை


வடமராட்சி,மார்ச் 29

புலோலி மேற்கு சதாவதானி கதிரைவேற்பிள்ளையின் குருபூசை தினம் இன்று திங்கட்கிழமைமாலை 4. 30 மணிக்கு புலோலி மேற்கு சதாவதானி கதிரைவேற் பிள்ளை சனசமூக நிலைய மண்டபத்தில் கொண்டாடப் படவுள்ளது.

பல பெரியார்கள் சதாவதானியின் தொண்டுகள், பணிகள் பற்றி உரை நிகழ்த்தவுள்ளனர். (ஐ-173-31)

# நீங்காத நினைவலைகள்

17 ஆம் ஆண்டு | 8 ஆம் ஆண்டு | 3 ஆம் மாதம்



அமரர்

### பொ. கணபதிப்பிள்ளை

(நடுவில்)

(சமாதான நீதிவானும், சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும்)

தோற்றம்: 15–09–1912 மறைவு: 14–03–1982

திதி: 05 – 04 – 1999



திருமதி


### சரோஜினி ஞானபண்டிதன்

(சரோ)

(சட்டத்தரணியும், பிரசித்த நொத்தாரிசும்)

தோற்றம்: 10–02–1956 மறைவு: 28–03–1991

திதி: 29 – 03 – 1999



திருமதி

### மரகதவல்லி கணபதிப்பிள்ளை

(நடுவில் பிள்ளை)

தோற்றம்: 12–09–1925 மறைவு: 05 12–1998

மறைந்தும் மறையாதும் மனங்களில் நிறைந்து விளங்கும் உத்தமர்களே!
உறையாத நினைவுகளை உள்ளகத்தே விதைத்து
நிறைவோடு பசுமை நினைவுகளை நெஞ்சகத்தே விரித்த உத்தமர்களே!
இறைஞ்சுகிறோம் உங்கள் ஆத்ம சாந்திக்காக,

கரணவாய் வடக்கு,
உடுப்பிட்டி.

[64225]

அன்பின் நினைவு கூரும்
குடும்பத்தினர்

சுவீற்ஸ் மேக்கர் தேவை

குலம் கிறீம் ஹவுஸ்
226, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/6949)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தொடரும் புறக்கணிப்பு

இராணுவத்தின் கட்டுப்பாட்டில் இல்லாத வன்னிப் பகுதிக்கு — அப்பிரதேச மக்களுக்கு — மூன்று வாரங்களாக உணவுப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படவில்லை. அப்பகுதிக்கு உணவுப் பொருள்களை அனுப்புவதற்கு இப்போது செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் உதவி நாடப்பட்டுள்ளது.

''போர்க் கோஷம்', என்ற பெயரில் படையினரின் இரண்டு இராணுவ நடவடிக்கைகள் நடைபெற்றதன் காரணமாகவே உணவுப் பொருள்கள் அனுப்பப்படவில்லை என்று அறியப்படுகிறது.

இராணுவத் தாக்குதல்களை நடத்துவதிலும் அவற்றில் வெற்றி காண்பதிலும் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளைக் கைப்பற்றுவதிலும் அரசுக்கு உள்ள அக்கறை, தமிழ் மக்கள் மீது இல்லை என்பது தெரிந்த விடயம் தான்.

மிகக் குறிப்பாக விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள — இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத — பகுதிகளில் வாழும் மக்களின் அன்றாட வாழ்க்கைத் தேவைகளை நிறைவேற்றுவதற்கு- வசதி செய்வதற்கு அரசாங்கம் எப்போதும் பின்னடித்து வருகிறது; தாமதம் செய்தும் வருகிறது.

வன்னி வாழ் மக்களின் மிகப் பிரதானமான அடிப்படைத் தேவைகளான உணவு, உடை, இருப்பிடம் ஆகியவற்றினை நிறைவேற்றுவதற்குக் கூட ஏற்பாடு செய்வதில் பாராமுகப் போக்கினை அரசு தொடர்ந்து கடைப்பிடித்துவருகிறது. இதுகண்டிக்கப்பட வேண்டியதாகும்.

இராணுவ நடவடிக்கை நடைபெற்றுக் கொண்டிருக்கையில்—இரு சாராரும் மோதிக்கொண்டிருக்கையில்—மக்களுக்குத் தேவையான பொருள்களை எடுத்துச் செல்வதில் சிரமம். தாமதம் ஏற்படுவது என்பது சற்று விளக்கிக் கொள்ளக் கூடியது.

ஆனால், மோதல் எதுவும் நடவாமலே இராணுவ நடவடிக்கைகள் பூர்த்தியாகிய பின்னரும், போக்குவரத்துக்கு ஒன்றுக்குமூன்று பாதைகள் இருந்தும் —

மூன்று வாரங்களாகஉணவுப் பொருள்கள் அனுப்பப்படவில்லை என்பது எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாத அநீதியாகும். இது வேண்டுமென்றே செய்யப்படும் புறக்கணிப்பு. மனிதநேயத்தைப் புதைத்துவிட்ட கல்நெஞ்சத்தனம். அரசு தனது கடமையிலிருந்து தவறும் குற்றமுமாகும்.

அவசரகாலத் தேவைகளை நிறைவேற்றுவதற்கென்று மேலதிக உணவு. இருப்பு (Buffer Stock) வைத்திருக்கும் நடைமுறையும் வன்னியில் அனுமதிக்கப்படுவதில்லை, அன்றாடங் காய்ச்சிகள்போன்று, உணவுப் பொருள்கள் உள்ளே சென்றால் மட்டுமே மக்களுக்கு விநியோகம் என்ற நிலை.

இத்தகைய சூழ்நிலையில் மூன்று வாரங்களாக உணவுப் பொருள்களை அனுப்பாதிருப்பது தமிழர்களை வேண்டுமென்றே பட்டினி போடும்,கொடுமையாகும். இவ்வாறு நடந்துகொள்ளும் அரசிடமிருந்து தமிழர் உரிமைகள் கிடைக்கும் என்று எதிர்பார்ப்பது பகற்கனவே!

# யாழ். போதனா ஆஸ்பத்திரியின் இயன் மருத்துவப் பிரிவு செயலிழப்பு!

யாழ் போதனா வைத்தியசாலையின் முக்கிய பிரிவுகளில் ஒன்றான, இயன் மருத்துவப் பிரிவு முற்றாக ஸ்தம்பிதமடைந்துள்ளதால், இயன் மருத்துவமுறையில் சிகிச்சை பெற்று வந்த பல நோயாளர்கள், சிகிச்சைபெற முடியாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இப் பிரிவில் பணிபுரிந்து வந்த ஒரேயொரு இயன் மருத்துவரும் நோய்வாய்ப்பட்டிருப்பதனால் இப் பிரிவு கடந்த பத்து நாள்களுக்கு மேலாக மூடப்பட்ட நிலையில் ஸ்தம்பித்துப்போயுள்ளது.

போதனா வைத்தியசாலையாக செயற்பட ஆரம்பித்த காலத்தில் சகல விதமான நோயாளர்களையும் குணப்படுத்தக்கூடிய வகையில் சகல உப வைத்தியப் பிரிவுகளுடனும் இயங்கி வந்த இந்த வைத்தியசாலையில், இயன் மருத்துவப் பிரிவு அதிமுக்கிய பிரிவாக இயங்கி வந்தது.

பலதரப்பட்ட விபத்துக்களினாலும், பாரிசவாதம், சன்னி போன்ற நோய்களினாலும் பாதிப்புற்று மருந்து வகைகளால் குணப்படுத்த இயலாத பல நோயாளர்களுக்கு,இப் பிரிவில் வழங்கும் இயற்கை வைத்திய முறையில், சிகிச்சை அளிக்கப்பட்டு குணப்படுத்தப்பட்டு வந்தது.

இந்த வகையில் அதி முக்கிய ஸ்தானத்தை வகித்து வந்த இந்த இயன் மருத்துவப் பிரிவு, பலதரப்பட்ட இயன் மருத்துவ உபகரணங்களுடன் பெரிய கட்டடமொன்றில் இயங்கி வந்தது. 14 இயன் மருத்துவர்கள் இவ் வைத்தியப் பிரிவில் பணிபுரிந்து வந்தனர்.

பின்னர் கடமையில் இருந்த இயன் மருத்துவர்கள் மாற்றலாகியும் ஓய்வுபெற்றும் சென்று படிப்படியாக மருத்துவப் பற்றாக்குறையுடன் இயங்கி, கடந்தகால இராணுவ நடவடிக்கையினால் கட்டடமும் முற்றாகச் சேதமடைந்து, மருத்துவ உபகரணங்களும் முற்றாக அழிந்து, செயலிழந்து போயிற்று.

இடப்பெயர்வுக்குப் பின்னர் போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணத்தில் முழுமையாக இயங்க ஆரம்பித்த காலத்தில், இப் பிரிவையும் இயங்கவைப்பதற்கு ஆஸ்பத்திரி நிர்வாகம் எடுத்த தீவிர முயற்சியின் பயனாக மீண்டும் அது சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்டது.

கட்டடம் முற்றாகச் சேதமடைந்து வைத்திய உபகரணங்கள் எல்லாம் அழிந்து எதுவும் அற்ற நிலையிலும்—

இப் பிரிவில் பணி புரிந்த இயன் மருத்துவர்களும் முழுமையாக யாழ்ப்பாணத்துக்கு கடமைக்குத் திரும்பாத பட்சத்திலும்—

குறைந்த வசதிகளுடன், இரண்டே இரண்டு இயன் மருத்துவர்களுடன், ஒரு சிறிய அறையில் இது இயங்க வைக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கைவிரித்த நிலையிலும் யாழ். மக்களின் நலன்கருதி வைத்தியசாலை பணிப்பாளரின் மற்றும் அதிகாரிகளின் முயற்சியால் இப் பிரிவு மீள இயங்கவைக்கப்பட்டது

இங்கு பணிபுரிந்த இரண்டு இயன் மருத்துவர்களில் ஒருவர் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டவராவார்.

நிரந்தரசேவையில் இருந்தவர் ஓய்வுபெற்றதுடன், இவ்வுலகையும் நீத்ததை அடுத்து ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்த ஓர் இயன் மருத்துவருடன் மாத்திரம் இப் பிரிவு இயங்கி வந்தது.

லீவு எடுக்க முடியாத நிலையில் தொடர்சேவையை வழங்கிவந்தஇந்தஇயன்மருத்துவரும், தற்போது நோய்வாய்ப்பட்டு பணிக்கு சமுகமளிக்க முடியாத நிலையில் கடந்த 10 நாள்களுக்கு மேலாக இப் பிரிவு ஸ்தம்பிதமடைந்துள்ளது.

சராசரி தினமும் ஐம்பது பேருக்கும் அதிகமான நோயாளர்கள்சிகிச்சைபெற்று வந்த இப் பிரிவில் நோயாளர் தற்போது சிகிச்சைக்கென வந்து தினமும் ஏமாற்றத்துடன் திரும்பிச் செல்கின்றனர். (உ)

## ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், மார்ச் 29

கோண்டாவில் ஸ்ரீ சத்திய சாயி நிலையத்தின் எட்டாம் ஆண்டு நிறைவுவிழா இன்று திங்கட்கிழமை கொண்டாடப்படவுள்ளது.

இன்றைய நிறைவு விழாவில பஜனை, பேச்சு, கருத்துரை, நாடகம் என்பனவும் 'தெய்வீகத் தோட்டத்தில் இருந்து சில மலர்கள்' என்ற நூலின் 5 ஆவது வெளியீடும் நடைபெறவுள்ளது.

(க)

## பொதுசன மாதாந்த உதவிப் பணம்

தென்மராட்சி, மார்ச் 29

பளைப் பிரதேசத்தில் மாதாந்த பொதுசன உதவிப் பணம் பெறுபவர்களுக்கான பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களுக்குரிய கொடுப்பனவுகள் நேற்று முன்தினம் முதல் அந்தந்த அஞ்சல் அலுவலகங்கள் மூலம் வழங்கப்பட்டு வருவதாக பிரதேச செயலர் சு. புத்திசிகாமணி அறிவித்துள்ளார். (ஐ-117)

## வன்னியில் மேலும் பலர் வாந்திபேதியால் பாதிப்பு

வவுனியா மார்ச் 29

மடுவைக் கைப்பற்ற படையினர் மேற்கொண்ட இராணுவ நடவடிக்கையினால் இடம்பெயர்ந்து இராணுவக் கட்டுப்பாடற்ற மாந்தை பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ளவர்களில் வாந்திபேதி நோய்க்குள்ளானோர் எண்ணிக்கை 51 ஆக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாந்திபேதி நோய்க்குள்ளான 40 பேர் வரை மடு ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். தற்பொழுது மேலும் 11 பேர் இந்நோயினால பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

(ஐ-5-7)

## முத்திரைகள் வந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். பிரதான தபாலகத்திற்கு சுமார் 13 லட்சம் ரூபா பெறுமதியான முத்திரை வகைகள் கொழும்பிலிருந்து எடுத்து வரப்பட்டுள்ளதாக யாழ் பிரதம தபாலதிபர் சு. கோடீஸ்வரன் தெரிவித்தார்

எடுத்துவரப்பட்ட முத்திரைகளில் 100ரூபா,500ரூபா, ஆயிரம் ரூபா பெறுமதியான முத்திரைகளும் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-4)

## மடுவில் 19 ஆயிரம் பேர்

வவுனியா, மார்ச் 29

மடுவில் தற்பொழுது 19 ஆயிரத்து 860பேர் வசிக்கின்றனர் என்று மன்னார் அரச செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மக்களுக்கான நிவாரணம் மன்னார் செயலகத்தினால் தொடர்ந்து வழங்கப்பட்டுவருவதாக மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் எஸ். விஸ்வலிங்கம் தெரிவித்தார்.

(ஐ-5-7)

## பொலீஸ் இடமாற்றங்கள் அனைத்தும் ரத்து!

தென் பகுதியில் ஏப்ரல் 6 ஆம் திகதி நடைபெறவுள்ள மாகாண தேர்தல்களை ஒட்டி பொலீஸாருக்கு இடமாற்றம் மற்றும் லீவுகள் பதவி உயர்வு எதுவும் வழங்கப்படமாட்டாது என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

வடக்கு—கிழக்கு மாகாணங்களில் கடமையாற்றும் 200 பொலீஸாருக்கு அண்மையில் வழங்கப்பட்ட இடமாற்ற உத்தரவு மேற்படி தேர்தலையொட்டி இரத்துச் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ 5-7)

## சித்தன்கேணிப் பகுதியில் விசேட இடம்பெயர்சேவை

மூளாய், மார்ச் 29

விசேட அடையாள அட்டை பெறுவதற்காக இதுவரை விண்ணப்பம் செய்யாதவர்களின் நலன்கருதி விசேட இடம் பெயர் சேவை ஒன்றை வலி. மேற்கு பிரதேசசெயலகம் மேற்கொள்ளவுள்ளது.

வலிகாமம் மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வாழும் பலர் இன்னமும் விசேட அடையாள அட்டைகளைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பம் செய்யவில்லை. இவர்களின் நலன் கருதி வலி. மேற்கு பிரதேச செயலர் கா. சந்திரராசா தலைமையில் இரண்டு நாள்கள் விசேட இடம் பெயர் சேவை நடைபெறவுள்ளது.

எதிர்வரும் மூன்றாம், நான்காம் திகதிகளில் சித்தன்கேணி கணேசா வித்தியாசாலையில் இவ்விசேட இடம் பெயர் சேவை நடைபெறும். இதுவரை விசேட அடையாள அட்டைக்காக விண்ணப்பம் செய்யாதவர்களை மேற்படி இடம் பெயர்சேவையின்போது சமுகமளிக்கும்படி பிரதேச செயலர் கேட்டுள்ளார். (ஐ-99)

## ஆயுதங்கள் மீட்பு

கொழும்பு, மார்ச் 29

இரத்தினபுரியில் எம்பிலிப்பிட்டிய பகுதியில் நேற்று முன்தினம் இரு கிரனேட்டுக்கள் மற்றும் ஆயுதங்கள் பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டன என்று தெரிவிக்கப்படுகிறது.

இங்குள்ள வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வெடிபொருள்களே பொலீஸாரினால் கைப்பற்றப்பட்டன.

(ஐ - 5 - 7)

### உதய வாக்கு

என் சக உயிர்க்கு என்னால் ஆகும் எத்தனை நலனும் எத்துணை அன்பும் இக்கணமே எனைச் செய்திட விடுவீர்!

எரின் டீ ரெல்லெற்

### நாளை

பங்குனி 16

செவ்வாய்க்கிழமை

திதி: சதுர்த்தசி பின்இரவு 3.29 வரை.

நட்சத்திரம்: பூரம் பிற்பகல் 1.31 வரை.

சுபநேரம்: 10.43-12.13

ராகுகாலம்: 3.13-4.43

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## தவக்காலச் சிந்தனை-40

தவக்காலத்தின் தியானத்தில் 40 நாள்கள் தம்மை ஒறுத்து சொல், செயல், வாழ்வால் இறைபாடுகள், பயணங்கள், சிலுவையின் பாதையில் எம்மனங்களை இணைத்துக் கொண்டோம்.

தவறுகள், தடுமாற்றங்கள், சலனங்கள், சபலங்கள் மனித மனங்களைக் குழப்பும் பல சந்தர்ப்பங்களைத் தாண்ட வேண்டிய உலகில், பல மாற்றங்களுக்கு முகம் கொடுத்து வாழ்வது சுலபமல்ல, சவால்களே! இதில் மாற்றம் வேண்டும், மனமாற்றம் வேண்டும் இறைவா என வேண்டி தீயவற்றில் இறந்தாலே நல்லவைகளால் உயிர்பு பெறும் வாழ்வைச் சுவைக்கலாம்.

ஏற்றம் தேடும் உலகில் ஏமாற்றம் இன்றி வாழ தவங்கள், செபங்கள், தியானங்கள் செயற்படும் வாழ்வாக மாற்றம் பெறும்போது இயேசுவில் நாம் இணைந்து பரிசுத்த வாரத்தில், பரிசுத்த தளத்தில் பாடுகள், சோதனைகள், சவால்களை வென்று இயேசுவுடன் பயணித்து வாழ எம் வாழ்வில் மனமாற்றத்துடன் பரிசுத்த வாரத்தில் தவப்பயணத்தைத் தொடர்வோம்; மனமாற்றம் பெறுவோம்;

யோசப் பாலா


### யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்

## வைத்தீஸ்வரனைப் பணிவோம்

நல்லைநகர் நாவலர் சற்பிரசங்கம் செய்த கோயில்
எல்லவரும் போற்றுகின்ற வண்ணைச் சிவன் கோயில்
தொல்லைவரும் வினைகள் தீர்ப்பார் தொழுதேத்தும் கோயில்
மெல்லவலம் வந்து நாளும் விழாகாண்போம் நாமே.

தையல் வாலாம்பிகை தனைச் சேவித்து நாளும்
பையுள் வினைப் பசுபோதம் கழன்று ஞான
மெய்யுள் அமிழ்ந்திச் சுகானுபவம் பெறுவதற்கு
ஐயன் வண்ணை வைத்தீஸ்வரனைப் பணிவோம் நாமே.

— சைவப்புலவர் மு. திருஞானசம்பந்தபிள்ளை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சுகாதார விழா

தென்மராட்சி, மார்ச் 29

எழுதுமட்டுவாழ் கணேசா வித்திய லயத்தில் சுகாதார விழா அண்மையில் ஆசிரியர் வ. புவனேந்தின் தலைமையில் நடைபெற்றது.

விழாவில் மாணவர்களால் சுகாதாரம் தொடர்பான கலை நிகழ்வுகள் நடத்தப் பட்டதாக அதிபர் சி. வேலாயுதபிள்ளை தெரிவித்தார் (ஐ - 117)

## விலை கூட்டி விற்றால் கடும் நடவடிக்கை

அரியாலை, மார்ச் 29

நிர்ணய விலையை மீறி பொருள்களை அதிகரித்த விலைகளில் விற்கும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மீது கடும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

சமாசம் கப்பல் மூலம் தருவித்த பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யப் பட்டுள்ளது இவ் விலை நிர்ணயத்தை மீறி செயற்படும் கூட்டுறவுச் சங்கங்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப் படும்.

அத்துடன் கிலோ முப்பது ரூபா விலையில் மக்கள் கூட்டுறவுச் சங்கங்களில் சீனியை தாராளமாகப் பெற்றுக் கொள்ளமுடியும்.

கூட்டுறவுச் சங்கங்களில் போதியளவுசீனி கையிருப்பில் உள்ளது.

மக்களுக்கு சீனியை விநியோகிக்காத சங்கக்கிளைகள் குறித்து தமக்குத் தகவல் தருமாறும் உதவி ஆணையாளர் பாவனையாளர்களைக் கேட்டுள்ளார்.

(ஐ-17)

## செப்ரிசீமியா மரணம்

செப்ரிசீமியாவின் தாக்கத்திற்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் கடந்த வெள்ளியன்று ஒருவர் உயிரிழந்தார்.

மானிப்பாய் சுதுமலையைச் சேர்ந்த இம்மானுவேல் அனீற்றா (வயது 52) என்பவரே மரணமானவராவார்.

கடந்த 23 ஆம்திகதி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இவர் அதி தீவிர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைக்குட்படுத்திய நிலையிலேயே அங்கு மரணமானார்.


## தேவை

மருந்து விற்பனை உதவியாளர்கள் தேவை.
பிற்பகல் 4.00 மணிக்கு நேரில் வரவும்.

வாகி பார்மஸி,
கோண்டாவில் சந்தி,
பலாலி வீதி, கோண்டாவில்.

(64290)

## புதுவருட சுவை உணவு

புதுவருட கொண்டாட்டத்திற்கு
சிக்கன் புரியாணி, கட்லட், றோல்
போன்ற சுவை உணவுகள் தேவையா?
ஓடர்களை முன் கூட்டியே வழங்குங்கள்.

சாவா. பொழுதுபோக்குக் கழகம்
புகையிரத நிலைய வீதி,
சாவகச்சேரி.

(சி/6950)

# வடமராட்சியில் அமோக வரவேற்பு

பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழக நிதிக்காக

நெல்லியடியில் நாளை மறுதினம் 18, 19ஆவது மேடை ஏறுகிறது

# வேழம்படுத்த வீராங்கனை

(ஆட்ட நாட்டுக் கூத்து)

அதிகாரிகள், பட்டதாரிகள், ஆசிரியர்கள், உயர் தர வகுப்பு மாணவர்கள், மன்றக் கலைஞர்கள் ஒன்று சேர்ந்து நடித்து, வரலாற்றில் முத்திரை பதித்த இந்நிகழ்வைக் கண்டு களிக்க ஒரே ஒரு சந்தர்ப்பம்.

### விமர்சனம்

- 'பாரம்பரிய இயற்கைத்தன்மை மாறாது, நுட்பமாக நவீன அரங்கிற்கு நாட்டுக் கூத்தைக் கொண்டு வந்த மெற்றாஸ்மயில் பாராட்டுக்குரியவர்.' 'பேராசிரியர் நந்தி'
- 'நெருக்கடி மிகுந்த காலகட்டத்தில் நயக்கத்தக்க ஒரு நாட்டுக் கூத்து.' 'சொக்கன்'
- 'பலகால இடைவெளிக்குப் பின் ஒரு நல்ல நாட்டுக்கூத்தைத் தந்த மெற்றாஸ்மயில் பாராட்டுக்குரியவர்.' 'பேராசிரியர் அ. சண்முகதாஸ்'
- '... பாரதயாரிப்பு, அபூர்வமான நாட்டுக்கூத்து ... வல்கள் திணைக்கள உதவிப் பணிப்பாளர் மட்டக்களப்பைச் சேர்ந்த' 'எஸ் எதிர்மன்னசிங்கம்'
- 'மரபுவழிக் கலைகளின் ஊற்றுக்களையும், ஓட்டங்களையும், அறிவுபூர்வமாகவும், அனுபவரீதியாகவும் உணர்ந்த நண்பர் திரு. மெற்றாஸ்மயில் நாட்டுக்கூத்துகளுக்கு, ஈழத்து நாட்டுக் கூத்து வரலாற்றிலே அழியாத இடம் ஒன்று உள்ளது என்று துணிந்து கூறலாம்' 'கலாநிதி எஸ். சிவலிங்கராசா'
- 'நான் பல தடவை பார்க்கத் தூண்டிய நல்ல தொருகலைப்படையல்.' 'கலைப்பேரரசு ஏ. ரி. பொன்னுத்துரை'
- 'நாட்டுக் கூத்தல்லாது, சரித்திரப்படம் பார்க்கும் உணர்வு தான் எனக்கேற்பட்டது.' ரசிகன் 'கலாமினி சிவமூர்த்தி'
- 'துன்பத்தில் துவளும் மக்களுக்கு பாரம்பரிய கலைகள் மூலம் இன்பத்தில் திளைக்க வழிசெய்யும் நிகழ்வாகவே இக்கூத்து உள்ளது.' 'துரை ஆரோக்கியதாசன்' கத்தோலிக்க கலை இலக்கிய வட்டம்



நாட்டார் வழக்கியல் ஆய்வாளரும், நாட்டுக்கூத்து — இசைநாடக — கிராமியக் கலைஞரும், சிறப்புக் கலைப்பட்டதாரியும், தீவக கல்வி வலய நிர்வாக உத்தியோகத்தரும், பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக் கழகத்தின் செயலாருமான

**திரு. செ. மெற்றாஸ்மயில்**

''சின்ன வன்னிய ராசனாக'' தோன்றும் தோற்றம்.

இடம்: **நெல்லியடி ம. மகாவித்தியாலயம்** (இருகாட்சிகள்) காலை, 10—30 மணி மாலை 2—30 மணி

**பெரியவர்களுக்கு ரூபா 50, தரை ரூபா 30, மாணவர்களுக்கு ரூபா 20**

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகம்.**

**வாழ்த்தி வரவேற்கின்றோம்.**

| | | | |
|---|---|---|---|
| ஜீவா பல்பொருள் வாணிபம் நெல்லியடி, கரவெட்டி. | செல்லத்துரை சைக்கிள் ஸ்ரோர்ஸ் எம் எம் வி. றோட், நெல்லியடி. | மொடேன் கல்விநிலையம் கு. இராஜரத்தினம் நினைவாக நெல்லியடி, கரவெட்டி. | நெல்லியடி சனசமூக நிலையம் நெல்லியடி, கரவெட்டி. |
| சாராஸ் நெல்யயடி, கரவெட்டி. | ஸ்ரீ அம்பாள் ஜுவலர்ஸ் நெல்லியடி, கரவெட்டி | நெல்லைக்குமரன் றேடர்ஸ் நெல்லியடி, கரவெட்டி. | கஜமுகன் கொமினிக்கேசன் கோப்பாய்ச்சந்தி, கோப்பாய், 021-3049 |
| லிபேட்டி மோட்டர்ஸ் நெல்லியடி, கரவெட்டி. | என். எஸ். ஆர் கடைச்சல் தொழிலகம் நெல்லியடி, கரவெட்டி. | | |

**11-4-99 பருத்தித்துறை வட இந்துமகளிர் கல்லூரியில் பெரியவர்களுக்கு மட்டும் காண்பிக்கப்படும்.**

(சி/6934)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 53 ஆம் நாள் நினைவு தினமும் 25 ஆவது பிறந்தநாளும்



அமரர்

### செல்வி சுகந்தினி சுந்தரலிங்கம்

அன்னை மடியில்: 24 – 03 – 1974
ஆண்டவன் அடியில் 05 – 02 – 1999

அரும்பாகத் துளிர்த்த நீ
மொட்டவிழ்ந்த மலராவாய் எனவும்
காயாகிக் கனியாவாய் எனவும்
கனவில் நினைத்தோம் நாம்
அனைவரிலும் அன்பு கொண்ட
அரும்பே! கண்மணியே! சுகந்திக் குஞ்சே!
மலர முன்பே கருகி எம்மை
மல்க வைத்தாய் கண்ணில் நீரை
உருக வைத்தாய் மண்ணில் நெஞ்சை
உன் பிறந்த இந்நாளில் உருகுகின்றோம்.

**அப்பா, அம்மா, சகோதரர், மைத்துனர், மைத்துனிகள், பெரியம்மா, சித்தப்பா, அன்ரி, பிள்ளைகள்.**

வீசியடி, ஏழாலை வடக்கு. (64293)

## மரண அறிவித்தல்

### அருளம்பலம் வேலுப்பிள்ளை

(இளைப்பாறிய ஆசிரியர், மாவிட்டபுரம்)

மாவிட்டபுரத்தைப் பிறப்பிடமாகவும் தற்போது வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட ஓய்வுபெற்ற ஆசிரியர் அருளம்பலம் வேலுப்பிள்ளை அவர்கள் 28 – 03 – 99 இல் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற அருளம்பலம் பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆசிரியை அன்னபூரணம் அவர்களின் அன்புக் கணவரும், கலாவதி (உதவி முகாமையாளர், மக்கள் வங்கி, வவுனியா), பிறேமாவதி (உதவிக் கல்விப் பணிப்பாளர், மாகாணக் கல்வித் திணைக்களம்), ரதி (திட்ட உத்தியோகத்தர், தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் அலுவலகம்), ரஞ்சினி (உத்தியோகத்தர், யாழ். பல்கலைக் கழகம்), அருந்தவராசன் (சமூக சேவை உத்தியோகத்தர், வவுனியா) ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவலிங்கம் (நலன்புரி நிலையப் பொறுப்பாளர், வவுனியா), செல்வின் (பணிப்பாளர், கைத்தொழில் திணைக்களம்), நகுலேஸ்வரன் (நலன்புரி நிலைய இணைப்பாளர், தெல்லிப்பழை), இந்திரகுமார் (உத்தியோகத்தர், யாழ். மாநகரசபை), இந்திராதேவி (ஆசிரியை, இறம்பைக்குளம் மகா வித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமனாரும், தர்ஷி, துளசி, வினு, வாமனன், நாரணி, மயூரன் ஆகியோரின் அன்புப் பாட்டனாரும், காலஞ்சென்றவர்களான முத்துக்குமாரு, சிவபாக்கியம், சின்னத்துரை, செல்லத்துரை, இளையதம்பி, வீரசிங்கம் ஆகியோரினதும் திருமதிசெல்வநாயகி, தம்பித்துரை, இரத்தினசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 29 - 03 - 99 இன்று மாலை 3 மணிக்கு உக்கிளாங்குளத்தில் நடைபெற்று தட்சினாங்குளம் மயானத்தில் தகனஞ் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்

**வே. அருந்தவராசா** (மகன்)
**எஸ். சிவலிங்கம்** (மருமகன்)

63/19, உக்கிளாங்குளம்,
வவுனியா. (சி/6953)

# மாணவருக்குரிய சீருடைத் துணிகள் லங்கா முடித்தவில் நேற்று வந்தன

யாழ்ப்பாணம், மார்ச் 29

யாழ். மாவட்ட மாணவர்களுக்குரிய சீருடைத் துணிகள் லங்கா முடித்த கப்பல் மூலம் நேற்று எடுத்து வரப்பட்டுள்ளன.

யாழ். மாவட்டத்திலுள்ள வலயப் பணிப்பாளர்கள் தமது வலய மாணவர்களுக்கு உரிய சீருடைத் துணிகளை இன்று பெற்று விநியோகிக்குமாறு யாழ். வலயப்பணிப்பாளர் ந. தணிகாசலம்பிள்ளை கேட்டுள்ளார்.

யாழ். வலயப் பாடசாலைகளுக்கான சீருடை வழங்கல் ஆரம்ப விழா நாளை வேம்படி மகளிர்கல்லூரியில் நடைபெறவிருக்கின்றது. (இ-3)

## பெரிய மடுவில் தாக்குதல்

பெரிய மடுப பகுதியில் நேற்று முன் தினம் படையினர் மறைந்திருந்து மேற்கொண்ட தாக்குதலில் 5 விடுதலைப் புலிகள் உயிரிழந்தனர் என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன. (இ-6)

## ஆயுர்வேத வைத்தியசாலை

நெல்லியடி, மார்ச் 29

வடமராட்சி தென் மேற்கு பிரதேச சபையால் 3 இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்ட நெல்லியடி ஆயுர்வேத வைத்தியசாலை, அண்மையில், திறந்து வைக்கப்பட்டது. (இ-109)

## 12 ஆயிரத்து...

(முதலாம் பக்கத் தொடர்)

விக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

★ இலங்கையில்காணாமற் போவோரில் இது வரை 12ஆயிரத்து108பேர்தொடர்பான தகவல்எதுவும் கிடைக்கவில்லை. இவர்களில் பெரும்பாலானவர்கள் வடக்கு—கிழக்கைச் சேர்ந்த இளம் ஆண்களே.

★ உலகில் காணாமற் போனோரில் தகவல் கிடைக்காதவர்களின் எண்ணிக்கையில் இலங்கை இரண்டாவது இடத்தை வகிக்கின்றது. முதலாவது இடத்தை ஈராக் பெறுகின்றது. அங்கு காணாமற்போனோர் எண்ணிக்கை 16 ஆயிரம்.

★ கடந்த வருடம் காணாமற்போனோர் தொடர்பாக நால்வரின் விவரங்களை இலங்கை அரசிடம் சபை கேட்டிருந்தது.

★ காணாமற்போனோர் தொடர்பாக இந்தச் சபை பல தடவைகள் இலங்கையை எச்சரிக்கை செய்தும் 95 ஆம் ஆண்டுக்குப் பின்னர் கணிசமான அளவினர் காணாமற் போயுள்ளனர்.

★ காணாமற் போய் தகவல் தெரியாதுள்ளவர்களில் பெரும்பாலானவர்கள்வடக்கு–கிழக்கில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

★ சுற்றிவளைப்பு தேடுதல் போன்ற நடவடிக்கைகளின் போதே கூடுதலானவர்கள் காணாமற் போயுள்ளனர்.

இலங்கையில் தொடரும் இந்த நிலைமையை நேரில் ஆராய ஐ.நா. மனித உரிமைகள் செயலணிக்குழுவின் பிரதிநிதிகள் அடங்கிய குழு ஒன்று இலங்கை வரவிருக்கின்றது.

இப்படித் தெரிவிக்கப்பட்டது.

அதேநேரம் - இந்த முறைப்பாடுகள் தொடர்பாக ஆராய்ந்து மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் பற்றி விசாரிக்க குழு ஒன்றை நியமிக்க இலங்கை அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும்—

இந்தக் குழுவை அமைக்க அமைச்சரவைக்கு அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்படவிருக்கின்றது என்றும்— இலங்கை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (இ-3)

## காலமானார்

கொழும்பு, மார்ச் 29

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அறிவிப்பாளராகவும், இசைத்துறை கட்டுப்பாட்டாளராகவும் பணியாற்றிய எஸ். கே. பரராஜசிங்கம் தனது 67 ஆவது வயதில நற்றுக்காலமானார்.

கடந்த சில மாதங்களாக நோய்வாய்ப்பட்டிருந்த அவர் கோட்டே ஸ்ரீ ஜெயவர்த்தனபுர வைத்தியசாலையில் நேற்று மரணமானார்.

மெல்லிசைக் கலைஞராகவும், இசையமைப்பாளராகவும் விளங்கிய இவர் யாழ்ப்பாணம் கட்டுவனச் சேர்ந்தவர். (இ-3)

## பூநகரி...

(முதலாம் பக்கத் தொடர்)

பேட்டியில் அவர் மேலும் கூறியதாவது:-

'போர்க் கோஷம்' இராணுவ நடவடிக்கை படைகளைப் பரவ விட்டுள்ளது. இந்த நடவடிக்கை மூலம் கிளிநொச்சி — பூநகரிப் பாதையைக் கைப்பற்றுவதால் பயன் ஏதும் கிடைக்கப் போவதில்லை

வவுனியா — யாழ்ப்பாணம் நெடுஞ்சாலையைக் கைப்பற்றுவது தான் படையினரின் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும்.

'வெற்றி உறுதி' நடவடிக்கையின் போது விடுதலைப் புலிகளுக்கு இருந்து வந்த அழுத்தம் இப்போது இல்லை.

கிளிநொச்சி — பூநகரிப் பாதையைத்திறப்பதனால்புலிகளுக்கு அழுத்தமும் இல்லை. பாரமான வாகனங்கள் அந்தப்பாதையால் செல்லவும் முடியாது. அந்தக் கரையோரப்பாதையால் புலிகள் ஆயுதங்களை கடத்தப் போவதும் இல்லை.

பொதுவில் இந்த நடவடிக்கையால் பயன் ஏதும் கிடைக்கப் போவதுமில்லை.

இந்த நடவடிக்கை மூலம் புலிகளைப் பலவீனமாக்கவோ அழிக்கவோ முடியாது. அப்படி நினைத்தால் அது தவறானது.

இப்படி அவர் தெரிவித்தார். (இ-3)

## வலி.வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்)

எஸ். வில்சன், ரெலோசார்பில் அடைக்கலநாதன், ஸ்ரீகாந்தா ஆகியோர் பங்கு பற்றினர்.

இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் வருமாறு:-

★ வலிகாமம்வடக்குகாணி சுவீகரிப்பைத் தற்காலிகமாக ஒத்திவைப்பதாக ஜனாதிபதி கூறியுள்ளார். அந்த அறிவிப்பு முடிந்த முடிவாக அமையவில்லை. ஆகவே அந்தப் பகுதியில் மக்களை மீளக் குடியமர அனுமதிக்க வேண்டும். அத்துடன் சுவீகரிப்புத் தொடர்பானமுடிவை ரத்துச் செய்யவேண்டும்.

★ செம்மணியில் புதைகுழி தோண்டும் செயலைத் துரிதப்படுத்த வேண்டும்.

★ செம்மணியில் புதைகுழி தோண்டும்போது சர்வதேச அமைப்புக்களை அழைத்தல்.

★ வன்னிக்கு உடன் உணவுப் பொருள்களை அனுப்புதல். (இ-3)

## அலுவலகங்களில்,..

(முதலாம் பக்கத் தொடர்)

கப்படும் என்றும்—

அலுவலங்களில் உள்ள கன்ரீனிலும் சிகரெட் விற்பனை செய்யக்கூடாது என்றும்— சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3

## அரசுடனும்...

(முதலாம் பக்கத் தொடர்)

கள் வன்னிக்குச் செல்லும் பாதை தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினையேபொருள்கள் அனுப்பப்படாமைக்குக் காரணம் எனக் கூறப்பட்டது.

இருதரப்பும் ஏற்கக் கூடிய பாதை ஒன்றை ஏற்பாடு செய்ய வவுனியா அரச அதிபர் இரு தரப்புடனும் தொடர்பு கொண்டுள்ளார்.

அதே நேரம்— நாளை கொழும்பில் நடக்கும் பாதுகாப்பு அமைச்சு மாநாட்டில் இது தொடர்பாக ஆராயப் படவிருப்பதாகவும் கூறப்பட்டது. (இ-3-21-164)

## எலும்புகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

வைத்து சீல் பண்ணப்பட்டன. சீல் பண்ணப்பட்ட பெட்டிகளைபொறுப்பேற்றுக் கொண்ட யாழ் பொலீஸார்அவற்றை பலாலிக்கு எடுத்துச் சென்று விமானம் மூலம் கொழும்பு தலைமை சட்ட வைத்திய அதிகாரி பிரிவுக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

இதேவேளை—துரையப்பா விளையாட்டரங்குக்குமேற்குப் புறமாக உள்ள பிரஸ்தாப புதைகுழிக்குத் தொடர்ந்து பொலீஸ் காவல் போடப்பட்டுள்ளது. (இ-6)

## விருதியிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்)

தமிழர்கள் கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

அந்த 'பாக்'கில் இருந்து ரி 56 ரகத் துப்பாக்கி ஒன்று, 303 ரக ரவைகள், 200 கிராம் வெடிப்பொருள்கள் உட்பட பல் ஆயுத தளபாடங்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலீஸார் தெரிவித்தனர்.

கொழும்பில் மேலதிக சிகிச்சை பெறுதவற்காக யாழ்ப்பாணத்தில இருந்து செஞ்சிலுவை சர்வதேசக் குழுக் கப்பலில் சென்றவர்களும் வெளிநாடு செல்ல இருந்தவர்களுமே அந்த விடுதியில் பெரும் எண்ணிக்கையில் தங்கி இருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## தள்ளாடி....

(முதலாம் பக்கத் தொடர்)

என்றும் செய்திகள தெரிவித்தன-

இந்த ஷெல்தாக்குதலால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்து நேற்றிரவு வரை தகவல் எதுவும் கிடைக்கவில்லை.

மன்னார் நகருக்கு இந்த ஷெல் சத்தங்கள் கேட்டன என்று அப்பகுதி மக்கள் தெரிவித்தனர். (இ-3-164)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபத்தில் பஸ் சேதம்

யாழ்ப்பாணம், மார்ச் 29 யாழ்ப்பாணம் இலுப்பையடிச் சந்திப்பகுதியில் சீருடையினரின் டிறக் வண்டிக்கும், வடபிராந்திய போக்குவரத்துச் சபை பருத்தித்துறைச் சாலை பஸ் வண்டிக்கும் இடையில் இடம்பெற்ற விபத்தில் பஸ் வண்டி சேதமடைந்தது.

பருத்தித்துறை - யாழ்ப்பாணப் போக்குவரத்துச் சேவையில் ஈடுபட்டிருந்த பஸ் வண்டியே சேதமடைந்தது.

கடந்த இரு நாள்களுக்கு முன் இடம்பெற்ற இவ்விபத்தில் பஸ் வண்டியில் பயணம் செய்த பயணிகள் தெய்வாதீனமாக காயம் எதுவும் இன்றித் தப்பித்துக் கொண்டனர். (ஐ-15)

## கூட்டணிப் பிரமுகர் காலமானார்

கொழும்பு, மார்ச் 29 கொழும்பில் மரணமான தமிழர் விடுதலைக்கூட்டணிப் பிரமுகரான ஆ. நடராசாவின் இறுதிக்கிரியைகள் கனத்தையில் நேற்று நடைபெற்றன.

உதயசூரியன் கொடியால் போர்க்கப்பட்டு மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த அவரின் பூதவுடலுக்கு தமிழர் விடுதலைக் கூட்டணி சிரேஷ்ட உப - தலைவர் வீ. ஆனந்தசங்கரி, யாழ். மாவட்ட சபையின்முன்னாள் உறுப்பினர் க. சின்னத்துரை உட்பட கூட்டணிப் பிரமுகர்கள் அஞ்சலி செலுத்தினர். பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்து கொண்ட இறுதி நிகழ்வில் க. சின்னத்துரை, ரகுபதிபால சிறீதரன் ஆகியோர் அஞ்சலியுரை நிகழ்த்தினர்.

காலஞ்சென்ற ஆ. நடராசா யாழ். மாவட்டசபை இயங்கிய காலத்தில் அதன் கூட்டணி உறுப்பினராக இருந்தவர். (இ-3)


**கலைமகள்**
கல்வி நிலையம்,
கே. கே. எஸ். வீதி,
கொக்குவில்.

எழுதுவினைஞர் பரீட்சைக்கானவகுப்பு
பிரிவு — 2
ஆரம்பம்:- 02 - 04 - 99
(வெள்ளி மாலை 4 மணி)

ஆசிரியர்:
திரு. குமாரவேல்
B. A. ( Hons )
(64255)



## திருமண அழைப்பு

◀♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥♥▶

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான வெகுதானிய வருஷம் பங்குனித் திங்கள் 17 ஆம் நாள் (31 - 03 - 1999) புதன்கிழமை பகல் 11-12 மணி முதல் 12-10 மணிவரையுள்ள உத்தர நட்சத்திரமும் மிதுன லக்கினமும் அமிர்தசித்த யோகமும் கூடிய சுப முகூர்த்த நல்வேளையில்

எமது செல்வப் புதல்வன்
திருநிறை செல்வன்
**ரவீந்திரகுமார்**
உரிமையாளர், சுப்பஸோவிடியோ
அவர்களுக்கும்

எமது செல்வப் புதல்வி
திருநிறை செல்வி
**அனுஷியா**
(பபி)
அவர்களுக்கும்

நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலா மண்டபத்தில் திருவருள் துணை கொண்டு திருமாங்கல்யதாரணம் செய்து வைக்கப் பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருப்பதால் அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்-

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி செ. வீரசிங்கம்
198 - 5, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

திருமதி இ. நல்லையா குடும்பம்
38, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

( தனிப்பட்ட அழைப்புகள் இல்லை )
(சி/69 52)



## பிரிவுபசார விழா

முப்பத்தொரு ஆண்டுகள் பேராதனைப் பல்கலைக் கழகத்திலும், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திலும் சேவையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும்

எமது சங்க அங்கத்தவர்
**திரு. சி. அருட்பிரகாசம்**
(உதவிப் பதிவாளர், யாழ். பல்கலைக்கழகம்)
அவர்களின்

ஓய்வு கால வாழ்க்கை சிறப்புற மனமார வாழ்த்துகின்றோம்.

இன்று பிற்பகல் 3.00 மணிக்கு நூலக சேட்போர் கூடத்தில் பிரிவுபசார விழா இடம்பெறும்.

பல்கலைக்கழக ஊழியர் சங்கம்,
யாழ். பல்கலைக்கழகம்.
(64209)



## கொங்கிறீற் கற்கள்

இயந்திரம் மூலம் தயாரிக்கப்பட்ட கொங்கிறீற் கற்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்

**பில்மாட் என்ரபிறைசஸ்**
639/8, நாவலர் றோட்,
நல்லூர், யாழ்ப்பாணம்.
(64297)



எதிர்வரும் புதுவருட தினத்தை முன்னிட்டு...

இன்றைய நவநாகரிக

① ஸ்கேட் அன் பிளவ்ஸ் ① சேட் ① T சேட்
① ரவுசர் லெந், றெடிமேட் ஷேட்டிங் சூட் வகைகள்
① அனைவருக்குமேற்ற அனைத்துத் துணி வகைகள்
① அதி நவீன அனைத்து சாறி வகைகளையும்

நீங்கள் மனநிறைவுடன் தெரிந்திடவென
இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்து விற்பனை செய்கின்றார்கள்

## காவேரி சில்க்ஸ் ஸ்தாபனத்தார்

### விரையுங்கள்!

மொத்த வியாபாரிகளுக்கு விசேட கழிவுண்டு.
எம்மிடமுள்ள சாறி வகைகளில் சில...

BEAUTY QUEEN, BEST CHOICE, GOLDEN GLORY, GODWOD, LOVE BUG, LADY TEACHER, LION SILKS, MANISHA, NILI GRAPE, NEELIMA, OPTIMA SILKS, OPEN ORDER, OPEL CHIFFON, ROYAL PEEL RESPHONES, REAL DIAMOND, SUPREME WORIYUR SARES....

முந்துங்கள்! நல்லதைத் தெரிந்திடுங்கள்!!
உங்கள் மனநிறைவே எங்கள் திருப்தி!

## காவேரி சில்க்ஸ்

48, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.
T.P. 021 - 2333
(64279)



## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

மலர்வு
26 — 03 — 1927



உதிர்வு
27 — 02 — 1999

திருமதி
**சின்னத்துரை நாகம்மா**
திதி: 29 — 03 — 99

ஆனதோ முப்பத்தொன்று அம்மா நீர் எமைப் பிரிந்து
அன்பான பேச்செங்கே? அழகான சிரிப்பெங்கே?
பண்பாய் பழகிவிட்டு பரிதவிக்கவிட்டு போனதேனோ?
ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்!

இன்று எமதில்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அந்தியேட்டி வைபவத்திலும் மற்றும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

பிரிவால் தவிக்கும்
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.
(சி/6951)


இப்பத்திரிகை நியூஉதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிடெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 29-03-1999 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org